விலை சதம் 5

பக்கங்கள் 8

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி சதம்		5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	,,	12-00
1 வருடச் சந்தா	,,	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புதுதகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 19உ புதன்கிழமை — Colombo, November 5 1947 | ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 21 | இதழ் 155

எல்லோர் அபிப்பிராயங்களையும் கேட்டு, ஏற்ற முடிவு செய்யவேண்டும்!

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி பிரச்னை

சுகாதார மந்திரிக்கு பிரதிநிதியின் ஆலோசனை

வாடிவீட்டில் தூதுக்கோஷ்டிகளின் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

"காங்கேசன்துறைராணுவ ஆஸ்பத்திரியை, "ஸிவில்" ஆஸ்பத்திரியாக்குவதா, க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்குவதா? என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாகும். காங்கேசன்துறைப் பிரதிநிதி என்ற முறையில சகல தூதுக்கோஷ்டிகளின் அபிப்பிராயங்களையும் கேட்ட பின்பே அரசாங்கம் இதில் ஒரு தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என நான் மந்திரியவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்."

இவ்வாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சென்ற சனிக்கிழமை சாயந்திரம், காங்கேசன்துறை ஆஸ்பத்திரிப் பிரச்னை சம்பந்தமாக சுகாதார ஸதஸ்ஸதாபன மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா பொதஜன அபிப்பிராயத்தை காங்கேசன்துறை வாடி வீட்டில் வைத்து தூதுக்கோஷ்டிகளிடம் கேட்டிருந்தபொழுது கூறினர்.

திரு. பண்டாரநாயக்கா, யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகிய இருவருடனும் தூதுக்கோஷ்டிகளைச் சந்திப்பதற்கு முன்பு, மயிலிட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரி, தையிட்டி கிராமம், கீரிமலை நீரூற்று, சிமெந்துத் தொழில் நிலையக் கட்டிடங்கள், ராணுவ ஆஸ்பத்திரி முதலியவற்றைப் பார்வையிட்டார்.

ராணுவ ஆஸ்பத்திரியிலும், வாடி வீட்டிலும் ஜனங்கள், திருவாளர்கள் பொன்னம்பலம், பண்டாரநாயக்கா, செல்வநாயகம் ஆகிய மூவருக்கும் மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

ஸிவில் ஆஸ்பத்திரி ஆக்கும்படி கேட்டவர்கள்

(1) யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை சார்பாக அதன் தலைவர் திரு ஆர் சிவகுருநாதர் முதலாவதாகச் சாட்சியமளித்தார்.

திரு. கே ஐயாத்துரை, திரு பி. சின்னத்துரை ஆகிய இருவரும் அவருடன் இருந்தனர்.

திரு. சிவகுருநாதர் கூறியதாவது:-

"யாழ்ப்பாணத்திலுள்ள ஹிந்து சமய நல பலன்களைப் பாதுகாப்பது சைவ பரிபாலன சபைதான். சமய காரணமாக ராணுவ ஆஸ்பத்திரியை க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்குதல் கூடாது. அந்த ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்கும் நிலத்தில் ஒரு பகுதி ஹிந்துக்களுக்கு மிகவும் புனிதமானது. காங்கேசன்துறை, கீரிமலை, மாவிட்டபுரம் ஆகியமூன்றிடங்களும் பரிசுத்தமான முக்கோணமாகும். அதன் நடுவே க்ஷயரோக ஆஸ்பத்திரியை நாட்டுவது இங்குள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிக்க வருபவர்களையும், கீரிமலையில் தீர்த்தமாட வருபவர்களையும் பயமுறுத்துவதாகும்.

(2) திரு. வீ எஸ். கார்த்திகேசு தென்மராட்சி மகாஜன சபையின் தலைவர் சைவ பரிபாலன சபையாரின் அபிப்பிராயத்தை ஆமோதித்தார்.

(3) திரு வீ முத்துக்குமாரு பரமேஸ்வரக் கல்லூரி உப தலைவர் க்ஷயரோக ஆஸ்பத்திரி ராணுவ ஆஸ்பத்திரியில் நாட்டப்படுவதை பலமாகக் கண்டித்தார். அவருடன் வேறு பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

(4) திரு எஸ். இளையதம்பி வழக்கறிஞர் சாட்சியமளிக்கும்போது யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள குடிஜனபிலாத தீவுகளில் ஒன்றில க்ஷயரோக ஆஸ்பத்திரியைக் கட்டும்படி கேட்டுக்கொண்டார்.

க்ஷயரோக ஆஸ்பத்திரி ஆக்கும்படி கேட்டவர்கள்

(1) திரு. சுவ மி நாதன், சைவாசிரிய கல்லூரித் தலைவர் கூறியதாவது:- "ராணுவ ஆஸ்பத்திரியை க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்க வேண்டும், கடிய தொகையான க்ஷயரோகிகள் யாழ்ப்பாணத்தில் தான் உண்டு. இப்படி ஒரு பெரும் கட்டிடத்தில் அதற்கொரு ஆஸ்பத்திரி கட்டப்படுவதை நாம் வரவேற்க வேண்டும்."

(திரு. சுவாமிநாதனுடன், வழக்கறிஞர் திரு. எஸ். நடராசாவும் - இன்னுமொருவரும் உடன் இருந்தனர்.)

(2) சங்கை. பிதா. பி. டபிள்யூ யோசு தாசன் மயிலிட்டிக் கோவிற்பற்றிலுள்ள 2000 பேருடைய அபிப்பிராயத்தைத் தாம் தெரிவிப்பதாயும் க்ஷயரோக ஆஸ்பத்திரி நாட்டவேண்டும் என்றும் சாட்சியமளித்தார்.

(3) சங். பிதா டி. எம். எஸ். ஜோஸ் சென் பத்திரியார் கல்லூரித் தலைவர் சாட்சியமளிக்கையில், தன்னுடைய நான்கு உபாத்தியாயர்களையும், அநேக மாணவர்களையும் க்ஷயரோகம் பலியெடுத்துவிட்டதாகக் கூறி க்ஷயரோக ஆஸ்பத்திரி கட்டாயம் வேண்டும் என்றும் வாதாடினர். எத்தனையோ வீடுகளில் க்ஷயரோகிகள் ஒளிமறைவாக இருக்கின்றதாகவும் கூறினர்.

(4) திரு. வி. இராசநாயகம் வழக்கறிஞர் சாட்சியமளிக்கையில் க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்குவதை ஆதரித்தார்.

(5) திரு எஸ். நாகலிங்கம் கூறியதாவது:- 'தஹநாயக்கா கமிட்டிக்கு முன் க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்க வேண்டாமென்றவர்கள் இம்முறை குறைந்துவிட்டார்கள், க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்குவதற்கு சமய சம்பந்தமான எதிர்ப்பாகவிருந்தால் மயிலிட்டியிலுள்ள ஆஸ்பத்திரியும் கோவிலுக்கருகில் இருப்பதால் அதையும் எடுத்துவிடவேண்டும். கீரிமலை பரிசுத்தமான இடம்தான். ஆயின் ராணுவ ஆஸ்பத்திரிக்கும் கீரிமலைக்குமிடையில் போயிட்டிக் கிராமமும் ஒரு கடலையும் இடையே இருக்கின்றன. மயிலிட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரி குடிஜன நெருக்கமான இடத்தில் இருக்கின்றது, க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு உகந்த இடம் ராணுவ ஆஸ்பத்திரிதான்,

திரு. எஸ். ரத்தினசாமியும் க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்குவதை ஆமோதித்தார்.

கள்ளந்நனமாக இலங்கைக்கு ஏற்றுமதி

தஞ்சை, ராமனாதபுரம் ஜில்லாக்களின் திருட்டு வர்த்தகம்

சென்னை, நவ 3

இன்று சென்னை சட்டசபையில் உணவு மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் கேள்விக்குப் பதிலளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி பங்கீடு செய்யப்பட்டு வரும் சரக்குகள் ராமனாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன. இத்திருட்டு வர்த்தகத்தைக் கண்டுபிடிக்க விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான சரக்குகள் இவ்விதம் ஏற்றுமதியாகி யிருக்கின்றனவென்று ஒரு அங்கத்தினர் கூறுகிறார். இது சம்பந்தமாக சர்க்காருக்கு போதிய தகவல் கிடைக்கவில்லை. ஆனால் இவ்வருடம் இதுவரை இக்கள்ள ஏற்றுமதி சம்பந்தமாக தஞ்சாவூரில் ஐவரும் ராமனாதபுரத்தில் இருவரும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். 2000 ரூபாய் பெறுமதியான சரக்குகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. (அ-பிரஸ)

காணாமற்போன கார் கண்டு பிடிக்கப்பட்டது

கொழும்பு, நவ. 4

கொழும்பு ஹோட்டன் பிளேஸ் திரு ஜே. வில்கின்ஸன் என்பவருக்குச் சொந்தமான ரூ 11,000 மதிப்புள்ள ஒரு ஸல்மான் கார் நேற்று அதிகாலை பில காணாமற் போய்விட்டதென்று போலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருந்தது இக்கார் நாவெல என்னும் இடத்தில் போலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் புதிய போலிஸ் ஸ்டேஷன்

கொழும்பு, நவ 4

இப்பொழுது தும்பிரிகாஸா பாவிலே ஒரு புதிய போலிஸ் ஸ்டேஷன் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்டேஷனில் ஒரு இன்ஸ்பெக்டர் மூன்று சார்ஜண்டுகள், 15 கான்ஸ்டபிள்கள் இருக்கின்றனர். சனிக்கிழமை காலை போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இந்த ஸ்டேஷனைத் திறந்து வைத்தார்.

இங்கிலாந்து முனிசிபல் தேர்தல் முடிவுகள்

கட்சிகளின் நிலைமை

லண்டன், நவ 3

இங்கிலீஷ் முனிசிபல் தேர்தல்களின் முடிவுகள் இன்று தெரிவிக்கப்பட்டன. கன்சர்வேடிவ் கட்சிக்கு 621 ஸ்தானங்கள் அதிகமாக கிடைத்திருக்கின்றன. தொழிற்கட்சி 652 ஸ்தானங்களை இழந்துவிட்டன. கன்சர்வேடிவ் கட்சியில் அனுதாபமுள்ள சுயேச்சைவாதிகளுக்கு 41 ஸ்தானங்கள் அதிகம் கிடைத்திருக்கின்றன.

மொத்தம் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த 1269 அபேட்சகர்களும், தொழிற் கட்சியைச் சேர்ந்த 831 அபேட்சகர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர். கட்சிகளின் நஷ்டம் பின்வருமாறு:-

கன்சர்வேடிவ் கட்சிக்கு லாபம் 639 ஸ்தானங்கள் நஷ்டம் 18 ஸ்தானங்கள் தொழிற் கட்சிக்கு லாபம் 43 நஷ்டம் 695 லிபரல் கட்சிக்கு லாபம் 46 நஷ்டம் 47. கம்யூனிஸ்டுகளுக்கு லாபமுமில்லை நஷ்டமுமில்லை சுயேச்சை வாதிகளுக்கு லாபம் 176 நஷ்டம் 135

இன்று காமன்ஸ் சபையில் முக்கியமான கைத்தொழில்களில் வேலையில்லாத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவதை சர்க்கார் கட்டுப்படுத்தும் நடவடிக்கையைக் கண்டித்து தொழிற்கட்சி அங்கத்தினரான திரு. டேவிஸ் தாக்கிப் பேசினர்.

பிரிட்டன்-அயர்லாந்து வர்த்தக உறவுபற்றி அட்லியும் டி வாலராவும் இரண்டு மணி நேரம் சந்தித்துப் பேசினர் நாளையும் பேச்சு நடைபெறும்.

(ராய்ட்டர்)

பாராளுமன்ற அங்கத்தினர் அலவன்ஸுகள்

கொழும்பு, நவ. 4

மந்திரிகள், பாராளுமன்ற காரியதரிசிகள், பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் முதலியோருக்கு அவரவர்கள் தெரியப்பட்ட தினத்தன்று தொடக்கம் அலவன்ஸுகள் வழங்கப்படும். பாராளுமன்ற அங்கத்தினருக்கு ரூ 600, பாராளுமன்ற காரியதரிசிக்கு ரூ. 1000 மந்திரிக்கு ரூ 1500 மாத வீதம் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தேசத்துக்கு மாதம் ரூ 78,500 செலவு ஏற்படும்.

பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்

கால்பேஸ் மைதானத்தில் வரவேற்புப் பொதுக்கூட்டம்

கொழும்பு, நவ 5

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி அங்கத்தினர்களை வரவேற்பதற்காக இன்று கால்பேஸ் மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திற்கு பிக்குராஹுல தலைமை வகிப்பார். கீழ்கண்டவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்:— திரு. ஜீ ஜீ பொன்னம்பலம், டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, டாக்டர். என். எம். பெரேரா, திரு பீட்டர் கெனமன், திரு ஜார்ஜ் ஆர். மோத்தா, திரு எச் ஸ்ரீநிசங்க, திரு டபிள்யூ. தஹநாயக, திரு வில்மட் பெரேரா, ஸ்ரீமதி. அய்ஷாரவுப், திரு எஸ். நடேசன்,

காஷ்மீர்

பரமுலா நகர்நோக்கி இந்திய துருப்புகள் பாய்ச்சல்

மலைஜாதியினரால் பிரிட்டிஷார் கொலை

போட்டி சர்க்காரின் கூக்குரல்

புதுடில்லி, நவ 3

இந்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி காரியாலய அறிக்கை:-

மேற்குத்திசையிலிருந்து காஷ்மீரத்தின் மீது நடைபெற்ற படையெடுப்பை முறியடிக்க டில்லியிலிருந்து ஸ்ரீ நகருக்குப் பறந்து சென்ற இந்திய துருப்புகள் தலைநகரான ஸ்ரீ நகருக்கு அபாயம் நேரிடாதபடி பாதுகாப்பைப் பலப்படுத்திக்கொண்டு முன்னேறிச் செல்கின்றன. எதிரிகள் தாங்கள் கைப்பற்றியுள்ள பரமுலா நகரிலிருந்து ரஸ்தாவழியாக முன்னேறி ஸ்ரீ நகருக்கு 17-வது மைலிலுள்ள பட்டன் என்ற கிராமத்தில் புகுந்திருந்தனர். இந்திய துருப்புகள் அவர்களை அக்கிராமத்தை விட்டுத் துரத்தி படித்தனர். எதிரிகளுக்கு அதிகமான சேதம் ஏற்பட்டது. இனி இந்திய துருப்புகள் பரமுலா நோக்கிச் சென்று அந்நகரை எதிரிகளிடமிருந்து மீட்கும்.

பிரிட்டிஷார் கொலை

மலை ஜாதியினர் காஷ்மீரத்தின் மீது படையெடுத்து வந்து பரமுலா நகரைக் கைப்பற்றிய போது, நகரிலுள்ள கன்னிமாடத்தைத் தாக்கி அங்குள்ள ஐரோப்பியர்களைக் கொன்றனர். கன்னிமாடத்தின் உதவித் தாபார் கொல்லப்பட்டார்; பிரதம தாயார் காயப்படுத்தப்பட்டார். அங்கிருந்த பிரிட்டிஷ் அதிகாரியான லெப்டினட் கர்னல் டைக்ஸுமும் அவரது மனைவியும் கொல்லப்பட்டனர். அவர்களது மூன்று குழந்தைகளைக் காணவில்லை. மலை ஜாதியினர் அக்கன்னிமாடத்தை தாக்கி அதிலிருந்தவர்களைக் கொன்று கன்னிமாடத்தைத் தீக்கொழுத்தினர். இந்நகர் ஸ்ரீ நகருக்கு மேற்கே 30-வது மைலில இருக்கிறது.

கர்னல் வடாலியா இந்தியா திரும்புகிறார்

பெர்லின், நவ. 3

ஜெர்மனியிலுள்ள இந்திய ராணுவ தூதுகோஷ்டியின் தற்காலிக தலைவரான கர்னல் எம் எஸ் வடாலியா இந்தியா திரும்புகிறார். அவருக்குப் பதில் மற்றொருவர் நியமிக்கப்படுவார் இந்திய ராணுவம் துரிதமாக தேசியமயமாக்கப்பட்டு வருவதாலும் அதற்கு அதிக அனுபவமுள்ள கர்னல் வடாலியா இந்தியாவில் பெரிய பொறுப்பான பதவியை ஏற்றுக்கொள்ளவே அவர் அழைக்கப்பட்டிருக்கிறாரென்று இந்திய சர்க்கார் அறிவிக்கின்றனர்.

காஷ்மீர் போட்டி சர்க்கார்

கராச்சி, நவ 3

காஷ்மீர் போட்டி சர்க்கார் தலைவரான சர்தார் முகமது இப்ராஹிம் தனது சுதந்திர யுத்தத்திற்கு ஆதரவளிக்கும்படி ஐக்கிய தேச ஸ்தாபன காரியதரிசிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். தனது சர்க்காரை அங்கீகரிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார். ட்ரூமன், அட்லி, டாலன், சியாங்கை ஷேக், முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் ஆகிய யாவருக்கும் தந்திகளை அனுப்பியிருக்கிறார் இவர் லண்டனில் பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவர் 30 வயதுடையவர். ராவல் பிண்டிக்கு 40வது மைலில் காஷ்மீர் எல்லைக்குள் 8வது மைலிலுள்ள புலந்தாரி என்னுமிடத்தில் இவர் தனது தலைமைக் காரியாலயத்தை நிறுவியிருக்கிறார்.

அபிரிடி தலைவர்கள் பாக்கிஸ்தான் வழியாக காஷ்மீருக்குப் படையெடுத்துச் செல்ல அனுமதி கோருகிறார்களென்று பெஷாவர் செய்தி அறிவிக்கிறது.

ஜின்னாவின் மாஜி காரியதரிசி கைது

புதுடில்லி, நவ. 2

ஜனாப் ஜின்னாவின் மாஜி காரியதாசியாகிய ஸ்ரீ குரேஷி இன்று ஸ்ரீ நகரில் காஷ்மீர் சர்க்காரால் கைதுசெய்யப்பட்டதாக டில்லியில் செய்தி கிடைத்திருக்கிறது.

நிஜாமுக்கு மருமகள் புத்திமதி

லண்டன், நவ 2

இப்போது பாரிஸில் இருந்துவரும் நிஜாமின் மருமகள் இளவரசி துர்யாஷவார் நிஜாமுக்கு ஒரு தந்தி அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இந்திய யூனியனில் சேரும் விஷயத்தில் நிஜாம் பிடிவாதம் காட்டக்கூடாதென இளவரசி பணிவுடன் யோசனை கூறியிருக்கிறார். இந்தியாவுடன் சமரச மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார். துருக்கியில் கடைசி கலீபாவான தம தகப்பனாருக்கு நேர்ந்த கதியை நிஜாமுக்கு மருமகள் ஞாபகமூட்டியிருக்கிறார்

பேரார் இளவரசர் தேக நிலை

ஹைதராபாத் நிஜாமின் புத்திரரான பேரார் இளவரசருக்கு சத்திர சிகிச்சை நடைபெற்றது. வாய்க்கும் கண்ணுக்கும் இடையில் மூக்கினருகே ஒரு கன்னத்தில் சத்திர சிகிச்சை நடைபெற்றது. அவருடைய மனைவியான இளவரசி நிலுபர் அவருடனிருந்து சிஷ்ருஷை செய்துவருகிறார்.

பெரோஸ் கான் நூன்

மத்திய கிழக்கு நாடுகளில் ஜனாப் ஜின்னாவின் தூதராகச் சுற்றுப்பிரயாணம் செய்யும் ஸர் பெரோஸ் கான் நூன் இன்று துருக்கியில் துருக்கி அந்நியநாட்டு மந்திரியையும் துருக்கியிலுள்ள பிரிட்டிஷ் தானிகரான ஸர் டேவிட் கெலியையும் சந்தித்துப் பேசினர்.

[ராய்ட்டர்]

முதல் செனட் சபைக் கூட்டம் 12-ம் தேதி நடைபெறும்

கொழும்பு, நவ.

செனட் சபையின் முதற் கூட்டம் இம்மாதம் 12-ம் தேதி செனட் சபைக்காக அமைக்கப்பட்ட காரியாலயத்தில மத்தியானம் 2 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் சபாநாயகர், உதவி சபாநாயகர், கமிட்டிகள் தலைவர் முதலியோர் தெரிவு நடைபெறும்.

துலா தலையில் விழுந்து பெண் மரணம்

திரிகோணமலை, நவ. 4

ஓயில் மங்கர் வீதியில் வசிக்கும் டாக்டர் குழந்தைவேலு என்பவரின் பங்களாவில் வேலை பார்க்கும் ஒரு பெண் கிணற்றில் நீர் அள்ளும் பொழுது துலா முறிந்து தலையில் விழுந்ததென்றும் உடனே அப்பெண் ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தப்பட்டு அங்கே அப்பெண் மரணமானாரென்றும் கூறப்படுகிறது. பிரஸ்தாப பெண்ணின் பெயர் மேரி என்று கூறப்படுகிறது.

அபின் வைத்திருந்த வருக்கு ரூ. 30 அபராதம்

திரிகோணமலை, நவ. 4

கட்டுக்குளப்பற்று வாசியான வன்னிநம்பி காசிப்பிள்ளை என்பவர் சட்டவிரோதமாக 305 கிரெயின் கஞ்சா வைத்திருந்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் திரிகோணமலை மாஜிஸ்டிரேட் திரு. டி. இராசரத்தனம் எதிரிக்கு 30 ரூ. அபராதம் விதித்தார்.

உங்கள் டெங்கனில் — மங்கள ஆரியன்

மெய்கண்டான்
REGD. 7479
திருக்குறட் கலண்டர்

புதிய கிளேஸ் கடுதாசியில் அச்சிடப்பெற்றது.

அன்புக்குரிய ஆப்த நண்பர்களுக்கு ஞாபகப் பொருளாக அனுப்பத்தகுந்தது!

1948-ம் வருடத்து மங்களகரமான

மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்

மனதைக் கவரும் பலவித அரிய திருக்குறள் வசனங்கள் உள்ளது.

10X15 அழகிய படங்களுடன் விலை ரூ. 1-75
9X7 படத்துடன் முதுமொழிக்கலண்டர் 0-85
No. 1 டயறி ரூ. 1-50, No. 2 டயறி சதம் 0 85

எழுதுங்கள் இப்பொழுதே! பிந்தினால் கிடைப்பதரிது.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை
மாட்டுவில், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 C, தட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.
சர்வஜித்து ஞ ஐப்பசி மீ 19உ
புதன்கிழமை

உண்மைச் சுதந்திரம்—5

இலங்கைத் தமிழர்கள்—அதிலும் தமிழ்க் காங்கிரஸின் கொள்கைகளைக் கைப் பிடிப்பவர்கள் செய்ய வேண்டியதென்ன? தமிழர்களின் நலவுரிமைகளுக்காகவே பாடுபடும் இந்த இயக்கத்தின் பிரதிநிதிகள் புறக்கணிக்கப் பெற்று சுயநலமிகளின் உதவி கொண்டு ஒரு மந்திரி சபையை திரு சேனநாயக்கா அமைத்திருக்கிறார் தமிழ்க் காங்கிரஸ்கார்கள் மந்திரி பதவிகளை ஏற்காததினால் ஏதோ தமிழ் மக்கள் குடி முழுகிப் போய்விட்டது என்று கூக்குரல் இடும் கூட்டத்தார்களும் இருக்கிறார்கள். இந்தக் கூக்குரலைக் கண்டு தமிழன் பயப்படத் தேவையில்லை. அரசாங்க உத்தியோகங்கள் கிடைப்பதில் தமிழனுக்குக் குறைவு ஏற்படலாம். ஓர் விஷயம் கவனிக்க வேண்டும். இலங்கையில் உள்ள எல்லா படித்த வாலிபர்களுக்கும் அரசாங்க உத்தியோகம் கொடுக்க முடியுமா? அவர்களின் வருமானத்தைக்கொண்டு நாடு செழித்தோங்க முடியுமா என்பதையும், இச்சிறு இரகசியத்தை யுணராதார்கள் தான் அரசாங்க உத்தியோகத்தைப் பெரிதாகக் கருதுவார்கள்.

தமிழன் உடனே செய்ய வேண்டியது என்ன? சுயநலமிகளைத் தோந்தெடுத்த மக்களிடையே தமிழ்க் காங்கிரஸின் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். அம்மக்கள் தாங்கள் தமிழன், தமிழன் தனித்து நின்று போராடி தனது நலன்களைத் தேடிக் கொள்ளக் கூடியவன் என்ற உணர்ச்சி சாதாரண கிராமவாசிகளிடமும் ஏற்படச் செய்ய வேண்டும் மக்களிடம் தன் நம்பிக்கை ஏற்படும்படி செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் தமிழ்த் தலைவர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்தவர்களாகக் கணிக்கப்படார். அது மாத்திரமன்று, மக்களும் இவர்களிடையே யிருந்த நம்பிக்கையும் குறைவுபடும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இருந்து வந்த நேசபாவத்தைக் கவனியுங்கள். அதிலும் தென் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இருந்த கூட்டுறவு எப்படியிருந்தது சிங்கள நாட்டிற்கும் தென் இந்தியாவிற்கும் அவ்வளவு நெருங்கிய உறவின் முறையிலா திருந்தாலும் தமிழ் மாகாணங்களுக்கும் தென் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது என்பதை யாவரும் உணர்வார்கள்.

தஞ்சை, இராமநாதபுரம் ஜில்லாக்களுக்கும் இலங்கை வடகீழ்மாகாணங்களுக்கும் இருந்து வந்த தொடர்பு மிகவும் நெருங்கியது. இவ்விரு நாடுகளுக்குப் கப்பல் போக்கு வரத்து அதிகம். கோடிக்கரையிலிருந்து தினந்தோறும் காங்கேசன் துறைக்கு இந்தியத் தபால்கள் 4 மணி நேரத்தில் கட்டுமரங்களில் 1905-ம் வருஷம் வரையில் கொண்டு வரப்பட்டன வென்பதை மறக்கவேண்டாம் ஜனங்கள் போக்கு வரத்தும் அப்படித்தான் இருந்தது. இந்தக் கப்பல் போக்கு வரத்தை பெரும் பாகம் இலங்கைத் தமிழர் கையில் இருந்தது. சுமார் 30, 35 வருஷங்களுக்குமுன் ஊர்காவற்றுறை போன்ற விடங்களில் பாய்கட்டிக் கப்பல்கள் எவ்வளவு இருந்தன என்பதை கவனியுங்கள். அந்தக் கப்பல்கள் எப்படி அழிந்தன, அதனால் தமிழனுக்கு எவ்வித நஷ்டம் என்பதை ஆராயுங்கள்.

தமிழனுக்கு நஷ்டமா இல்லையா என்பதை வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் உள்ள துறைமுகங்கள் பாழடைந்து, கடற்கரையில் உள்ள கிடங்குகள் குட்டிச் சுவர்களாக விருப்பதைக் கவனிக்கையில் விளங்கும். கப்பலோட்டிப் பிழைத்தவன் மகன் இப்பொழுது அரசாங்கக் குமாஸ்தா வேலை நமக்குக் கிடைக்காமற் போய்விடப்போகிறதே என்று பயப்படுகிறான். இரண்டு ராத்தல் பருத்திவாங்க நூற்று பணம் திரட்ட வேண்டும், இரண்டொரு கைத்தறிகள் போடவேண்டும் என்று ஏழ்மையில் எண்ண வந்துவிட்டான். "கப்பலோட்டி மகட்டகுடி, கொட்டை நூற்று மேலேற முடியுமா?" என்பது தமிழன் வசனம் இது யாழ்ப்பாணம், கீழ் மாகாணத் தமிழர்களுக்குத்தான் பொருந்தும்.

தமிழன் கப்பல்கள் எங்கே? என்று கேட்கிறீர்களோ? இது வெள்ளையர் போட்டியால் நாசமாயின. தென்னிந்திய ரயில்வேக் கம்பெனிக்கும், பிரிட்டிஷ் இந்திய கப்பல் கம்பெனிக்கும இருந்த ஒப்பந்தங் காரணமாக இலங்கையின் கடலோர வியாபாரம்அழிந்தன. குவாரண்டைன் என்ற பெயரால ஜனப் போக்கு வரத்திற்கு இருந்த வசதி தடுக்கப்பட்டது. அதன் காரணமாய் தமிழ் நாட்டிற்கும் இலங்கைத் தமிழ் மாகாணங்களுக்கும் இருந்த கூட்டுறவு குறைந்தது. 4 ரூபாய் 5 ரூபாயில் தான் தமிழ் நாட்டுக்குப் போய் வந்த தமிழன் 40, 50 ரூபாய் செலவு செய்து போகவேண்டிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறான். ரங்கூன், அக்கியாப் முதலியவிடங்களுடன் வியாபாரத தொடர்புள்ளவன் கப்பல் வியாபாரத்தினின்றும் விரட்டப்பட்டிருக்கிறான். இலங்கையின் இறக்குமதி முழுவதும் கொழும்பு நகரத்திற்கே கொண்டுவரப்பட வேண்டும் என்ற முறையில் எல்லாக் காரியங்களையும் பிரிட்டிஷ்காரர்கள் செய்துவிட்டனர். ஏன்? இலங்கையின் எல்லா வியாபாரங்களும் தங்கள் கையில் இருக்க வேண்டும் என்ற எண்ணமே! அதற்கு உதவியாக, அதற்குத் தக்க விதமாக இலங்கை இருப்புப் பாதைகளும் போடப்பட்டிருப்பதையும் கவனிப்பீர்கள் ரப்பர் தேயிலையை பிறநாட்டிற்கு ஏற்றவும், பிறநாட்டுச் சாமான்களை இலங்கையிற் பரப்பவும், இவ்விரு வேலையும் தங்கள் கையில் இருக்கவும் வெள்ளையர்கள தேடிக்கொண்டார்கள்.

இந்த கப்பல் வியாபாரம் சிங்களவர்களிடம் உள்ள விஷயமில்லை யாதலால் அவர்கள் வளர்ச்சி இத்துறையில் நாடவில்லை கிராமங்களுக் கருகில் தோட்டங்கள் ஏற்பட்ட காரணத்தால் கிராமங்கள் அப்விருத்தியடைய முடியவில்லையென்று, தோட்டங்களை விலைக்கு வாங்கிக் கிராமத்தாரகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க எண்ணும் சிங்கள மந்திரிகள், தமிழர்களது கிராமங்கள் நாசமடைந்தது கப்பல் வியாபாரப் நாசமானதால் என்பதை அவர்கள் எப்படி உணரப் போகிறார்கள்! அவர்கள் உணர முடியாது.

நிற்க, இங்கிலாந்துக்குப் இலங்கைக்கும் சில விஷயங்களில் ஒப்பந்தங்கள் ஏற்படவிருக்கிறது. அந்த ஒப்பந்தங்களில் நாட்டின் கடற்கரையோர கப்பல் வியாபாரமுமடங்கியதாகவிருக்கும். சிங்கள மந்திரிகளும், வெள்ளைக்காரர்களும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தங்கள் தமிழர்களுக்கு உரிமையாகவிருந்த கப்பல் வியாபாரத்தை மறுபடியும் தொடங்கக்கூடிய முறையில் இருக்க வேண்டும். கடலோர கப்பல் வியாபாரம் விருத்தியடைந்தால்தான் தமிழன் விருத்தியடைய முடியும் அரசாங்க உத்தியோகங்களினாலும் பிறவற்றாலும் அடைய முடியாது என்பது திண்ணம்.

மோட்டார் விபத்தில் 80 வயது கிழவி மரணம்

கொழும்பு, நவ. 4

வெள்ளவத்தை விசாகா கல்லூரி ஆசிரியரில் ஒருவரான திரு. எச். டி. பேர்னன்டோ என்பவர் காரைச் செலுத்த வருகையில் ஹவ்லக் வீதியில கொகுவலையைச் சேர்ந்த 80 வயதான ஒரு கிழவி வீதியைக் கடக்க முயன்று அக்காரினால் மோதுண்டார். இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்துள் மரணமானார் என்று கூறப்படுகிறது.

காசியிலிருந்து புது யுகம் பிறக்கட்டும்

கழனி தேர்தல் ஆட்சேபனை மனு

சட்டபிரச்னை விசாரணையை நீதிபதி பளநாயகா நடத்துவார்

கொழும்பு, நவ. 4

கழனி தொகுதி அங்கத்தவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவின் தேர்தலை ஆட்சேபித்து திரு. கே ஏ பெரேரா என்பவர் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். இப்பொழுது இந்த தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆட்சேபித்து கிளப்பப்பட்டுள்ள சட்டப் பிரச்னை பற்றி நீதிபதி திரு. பளநாயகா இம்மாதம் 10-ம் தேதி விசாரணை நடத்துவார்

துறைமுகத்தில் மாலுமி நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, நவ. 4

மாண்ட்ரீலைச் சேர்ந்த ஒரு மாலுமி ரோலண்ட் பொய்ரியர் என்பவர் 29-ம் தேதி இரவு கடலில் மூழ்கி விட்டதாகவும் இவரது பிரேதம் இரண்டு நாட்களின் பின் துறைமுகப் போலிசாரால் கண்டெடுக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

ரோலண்ட் பொய்ரியரும் வேறும் இருவரும் அன்றிரவு கரைக்கு வந்து பிரிஸ்டல ஹோட்டலில் பீயர் பத்து தடவை குடித்ததாகவும் பின்னர் தங்கள் கப்பலுக்கு வந்தையில் திரும்பிச் செல்கையில் கடலில் குதித்ததாகவும் மூன்று முறை திரும்பத் திரும்ப கடலில் குதித்தனரென்றும் மூன்றாவது முறை பொய்ரியர் கடலில் குதித்தபோது உதவி கோரியதாகவும் உடனே இவர் சென்றவதை உதவிக்கு திரும்பு முன் அவர் நீரில் மறைந்து விட்டாரென்றும் கூறப்பட்டது. வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. என். டபிள்யூ டி கோம் விசாரணை நடத்தினார் விசாரணை நடத்திய திரு. ஜே என். ஸ் திருச்செல்வம் விபத்தினால் மரணமென்று தீர்ப்பளித்தார்.

'குறுகிய மனப்பான்மை கூடாது'

அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டில் சரோஜினி தேவி முழக்கம்

காசி, நவ. 3

"புது வேத கோஷம் முழங்கட்டும், காசியிலிருந்து நம்பிக்கை பிறக்கிறது என்ற புது மந்திரம் தேசமெங்கும் பரவட்டும் இந்தியாவின் ஒப்பற்ற நகரங்களில் தலை சிறந்து விளங்கும் காசிமா நகர் இந்தப் புகழைப் பெறட்டும். அருகே ஓடும் கங்கைப் பிரவாகம் சதா ஜபித்துக் கொண்டிருக்கும் அன்புப் பிரார்த்தனை தேசமெங்கும் வியாபிக்கட்டும்" என்று ஐக்கிய மாகாண கவர்னர் ஸ்ரீமதி சரோஜினிதேவி, அகில இந்திய எழுத்தாளர் 2-வது வருஷாந்திர மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில கூறினார் அவர் மேலும் பேசியதாவது:-

"குறுகியமனப்போக்குஎழுத்தாளர்களுக்கு இருக்கக் கூடாது. அதே போல குறுகிய தேசிய மனப்பான்மையும் கூடாது. இன்றைய இலக்கியம் அன்றாட வாழ்வை சித்திரிப்பதாக இருக்க வேண்டும்.

காசியிலிருந்து எழுத்தாளர்களுக்கு ஒரு புது சகாப்தம் பிறக்கட்டும். கவி வாணர்கள், இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்கள், சத்தியத்தின் நெறி பிறழாதவர்கள் என்னும் பேர்பெற்ற எழுத்தாளர்கள் வெள்ளை உள்ளத்தையும், கூட்டுறவு வாழ்வையும் ஐக்கிய உணர்ச்சியையும் பரப்ப வேண்டும். இத்தியாதி காரியங்கள் நடந்தால் தான் இலக்கியம் தழைத்தோங்கும்."

காசி ஹிந்து சர்வகலாசாலையின் கெய்க்வார் லைப்ரரி கட்டிடத்தில் மகாநாடு கூடியது. 100க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தியாவில் பல்வேறு பாகங்களிலிருந்து மகாநாட்டுக்கு வந்திருந்தனர் டாக்டர் இக்பால் நாராயண் குர்து என்னும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் மகாநாட்டினரை வரவேற்றுப் பேசினார்.

"பழம் பெருமைகளையே பேசுவதில் பயனில்லை"

அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு கூடியபோது, டாக்டர் குணன்ராஜ் பேசுகையில் இந்தியாவில் பழங்காலத்து அரசியல் எல்லைகள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கலாச்சாரங்கள் ஒன்றுபட்டு பரிணமிப்பதை தடை செய்து விடவில்லை என்றும் ஒவ்வொ கோவிலும் ஒரு சர்வ கலாசாலையாகத் திகழ்ந்தென்றும் கூறினார்.

அடுத்தபடியாக டாக்டர்நாகராஜராவ் பேசுகையில் விஞ்ஞானம் பௌதிக துறைகளில் இந்தியா மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றிய போதிலும் மனித ஜாதியின் ஆத்ம வளர்ச்சிக்கு இந்தியாதான் மகத்தான வழிகாட்டியாக இருக்கிறது என்று கூறினார்.

ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசன் தம் பிரசங்கத்தில் இந்திய கலாச்சாரத்திற்கு அரசியல் எல்லைகளே கிடையாது என்று குறிப்பிட்டார். "பழங்காலப் பெருமைகளைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பது, செலாவணியில் இல்லாத ஆயிரம் ரூபாய் நோட்டுகளை காட்டி பெருமைப்படுவதை ஒக்கும். எழுத்தாளர்கள், இப்போது செலாவணியில் உள்ள நாணயங்களை உபயோகிக்க வேண்டும். அவர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பங்களை ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு பயன் படுத்த வேண்டும்" என்று அவர் வற்புறுத்தினார்.

கனம் ஆகாகான் சகோதரி கலியாணம்

பிரஞ்சு அதிகாரி மணம் புரிவார்

பாரிஸ், நவ. 3

கனம் ஆகாகானின் ஒன்று விட்ட சகோதரியான கம்பே இளவரசி நவாப் பேகத்திற்கும் பிரஞ்சு ரயில்வே கம்பெனியின் சமூக சேவா இன்ஸ்பெக்டரான மார்ஷல் மொல்லினுக்கும் வியாழக்கிழமையன்று பாரிஸில் வைவாகம் நடைபெறும் இக்கலியாணத்தால் தான் தனது மதத்தை மாற்றிக்கொள்ளவல்லை என்று திரு. மொல்லின் அறிவிக்கிறார். (ராய்ட்டர்)

உப்பு ஏற்றுமதியில் இலங்கை ஈடுபட வேண்டும்

உப்புக் கமிஷனர் ஆலோசனை

கொழும்பு, நவ. 4

இலங்கைச் சர்வ கலாசாலை பூமி சாஸதிர சபைக் கூட்டத்தில் இலங்கை உப்புக் கமிஷனர் திரு. ஈ பி. திஸ வீரசிங்கம் "இலங்கையில் உப்பு உற்பத்தித் தொழில்" பற்றி பேசுகையில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கும உப்பு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார். வங்காளம் முதல் ஜப்பான் வரையுமுள்ள தூர கிழக்கு பிரதேசங்களுக்கு உப்பு தேவைப்படும் பொருளென்றும் அந்நாடுகளுக்கு சுமார் 45 லட்சம் டன் உப்புக்குமேல் தேவைப்படுமென்றும இலங்கை இந்த மார்க்கெட்டைக் கைப்பற்றிக் கொள்வது வெகு சுலபமென்றும் கூறினார். இவர் தொடர்ந்து பேசுகையில் உப்பு உற்பத்தி முதலியவைபற்றியும் குறிப்பிடார்

வெங்காயத்தில் கொள்ளை லாபம்

கொழும்பு, நவ. 4

புறக்கோட்டை 5-ம் குறுக்கு தெருவைச் சேர்ந்த டி. டி. எல். ஜதலாசேனு என்பவர் வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலை ராத்தல் 12 சதமாக இருக்க இவர் ராத்தல் 75 சதமாக விற்றதாக குற்றம் சாட்டிக்கொண்டு வரப்பட்ட வழக்கில் கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தனு எதிரிக்கு ரூ. 250 அபராதம் விதித்தார்.

திரிந்துபொருள் விற்கும் வியாபாரிகள்

தடைசெய்ய வேண்டுமென கமிட்டிகள் முடிவு

கொழும்பு, நவ 4

வீதிகளில் திரிந்து சாமான்களை விற்பனை செய்பவர்களை போலிஸார் தடைசெய்யப்படாதென செப்டம்பரில் முனிஸிபல் சபை முடிவு செய்திருந்தது. போலிஸாரும் பின்னர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது இத்தடையை ரத்துச்செய்ய வேண்டுமென்றும் வீதிகளில் இருந்து பொருள்களை விற்பனை செய்வோரை தடுக்க வேண்டுமென்றும நகரின் அபிவிருத்தி, வீட்டு வசதிகள், சுகாதாரம், மார்க்கட்டுகள் முதலிய விஷயங்கள் பற்றி ஆலோசித்த முனிஸிபல் சபை நிரந்தரக் கமிட்டிகள் ஏகமனதாக முடிவு செய்துள்ளன. முற்றாக இதனை தடை செய்துவிட்டால் சுகாதார அதிகாரிகளிடம் லைசென்ஸ பெற்று வியாபாரம் செய்ய அனுமதிக்கலாமென்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

மீன் வர்த்தகத்துக்கு பனிக்கட்டி சப்ளை

கொழும்பு, நவ. 4

மீன்பிடி தொழிலுக்கு தேவையான பனிக்கட்டிகள் கிடைப்பதற்காக உடனடியாக பனிக்கட்டிகள் தயாரிக்கும் இயந்திரங்களைத் தருவித்து ஓழங்குகள் செய்ய தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி பகுதி மந்திரி நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியப்படுகிறது, மீன்பிடி தொழிலுக்கு பனிக் கட்டி தேவை பற்றி பலர் விண்ணப்பித்ததினால் மந்திரி இம்முடிவுக்கு வந்துள்ளதாக தெரிகிறது.

"காசினியெங்கும் கப்பல் விடுவோம்"

இந்திய அரசாங்கத்தின் ஆறு அம்ச திட்டம்

பாரதியாரின் கனவை நனவாக்குகிறார் திரு. பாபா

பம்பாய், நவ. 3

இன்று இந்திய கப்பல் கம்பெனிகளின் மகாநாடு கூடியது. இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி திரு சி எச். பாபா மகாநாட்டில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவின் கப்பல் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யவும் இந்தியாவின் வர்த்தகக் கப்பல்களையும் அவைகளின் பாதைகளைப் பாதுகாக்கும் படைக் கப்பல்களையும் அதிகரிக்கவும் அவைகளை தேசிய முறையில் பயன்படத்தக்கவாறு அமைப்பதற்கும் இந்திய சர்க்கார் ஆறு அம்ச திட்டமொன்றை புதிதாக வகுத்திருக்கிறார்கள். இத்திட்டத்தினபடி ஒரு புதிய ஸ்தாபனமொன்று நிறுவப்படும். இந்தியாவின் கப்பல் படையை நிர்வகிப்பதிலும் வர்த்தகக் கப்பல்கள் உற்பத்தி, போக்குவரத்து சம்பந்தமாக இந்தியாவின் கப்பல் கொள்கையை வகுப்பதிலும் இந்திய சர்க்காருக்கு போதிய செல்வாக்கு இருந்துவரும் முறையில் அந்த ஸ்தாபனம் அமைக்கப்படும். அப்படிப்பட்ட தேசிய கப்பல் கொள்கையை நடைமுறையில் அனுஷ்டிக்க சர்க்கார் அவ்வப்போது நடவடிக்கையெடுத்துவருவார்கள்.

இந்தியாவில் இரண்டுமூன்று கப்பல் கார்ப்பொரேஷன்கள் நிறுவப்படும். அவைகளின் மூலதனத்தில் சர்க்கார் 100க்கு 51 சத விகிதம் பங்கெடுத்துக்கொளவார்கள். முக்கியமான சில நிர்வாக விஷயங்களின் மீது ஆக்கம் வகிக்கவே சர்க்கார் இவ்விதம் அந்த கப்பல் கார்ப்பொரேஷன்களில் அதிக மூலதனம் போடுகிறார்கள்.

தனிப்பட்ட கப்பல் கம்பெனிகளோ அல்லது பல கம்பெனிகள சேர்ந்த கோஷ்டிகளோ இந்த கார்ப்பொரேஷன்களுக்கு ஏஜண்டுகளாக இருந்து வேலை செய்யவேண்டும். இப்படிப்பட்ட ஏஜண்டு கம்பெனி ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் டன் எடையுள்ள கப்பல்களை வைத்துக்கொள்ள உரிமை உண்டு.

எல்லா கப்பல் கம்பெனிகளையும் கப்பல் வர்த்தக சம்பந்தப்பட்டவர்களையும் கலந்து பேசி இந்த கார்ப்பொரேஷன்கள் அமைக்கப்படும்.

காசினியெங்கும் இந்திய கப்பல் ஓடவும் ஏனைய கப்பல் வர்த்தக நாடுகளுக்கு இணையாக இந்தியாவும் மாபெரும் கப்பல் வர்த்தக நாடாக விளங்கவும் இந்தியாவின் கப்பல் கொள்கை வகுக்கப்படும். நாட்டின் சுபிட்சத்தில் அக்கறையுள்ள கப்பல் முதலாளிகளின் ஒத்துழைப்புடன் சர்க்கார் இக் கொள்கையை வகுப்பார்கள். (அ-பி)

கொடிப் பிரச்னை

பம்பாய், நவ. 3

உலகெங்கும் போக்குவரத்து நடத்தவிருக்கும் இந்தியாவின் கப்பலகளில் எவ்விதகொடியை பறக்க விடுவது என்பதுபற்றி ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன,

பூமியதிர்ச்சியால் கஷ்டப் படுபவர்களுக்கு விமான மூலம் உதவி

லீமா (பீரு), நவ. 3

பலத்த பூமியதிர்ச்சியின் காரணமாக மததிய பீருவில் கஷ்டப்படுபவர்களுக்கு ஆகாய விமான மூலம உதவி அனுப்பப்பட்டுள்ளது. சத்திப்போவில் குறைந்தபட்சம் 40 பேராவது இப்பூகம்பத்தில் இறந்திருப்பார்கள என்று அறியப்படுகிறது. சென்ற சனிக்கிழமைதான் இவ்வதிர்ச்சி ஏற்பட்டுள்ள நாகும் (ராய்ட்டர்)

பட்டப் பகலில் திருட்டு

இளைஞனுக்கு 6 மாத சிறை

அனுராதபுரம், நவ 3

பட்டப் பகலில் ஒரு கிராமத்திலேயுள்ள ஒரு வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்தபோது உட் புகுந்த அங்கிருந்த பொருள்களைத் திருடியதாகவும் வீட்டின் சொந்தக்காரர்கள் திரும்பி வந்தபோது திருட்டு நடப்பதை நேரிற் கண்டு ஆளைக் கைது செய்ததாகவும கூறப்படுகிறது இது சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட டி. ஏ. வீரசூரியா என்னும் இளைஞனுக்கு அனுராதபுரம் மாஜிஸ்டிரேட் 6 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

புது சர்வகலாசாலைகள் ஸ்தாபித்தல்

பாஷாவாரி மாகாண அமைப்புக்குப் பின் நலம்

காந்திஜி யோசனைகள்:

ஆமதாபாத், நவ. 2

"புதிய சர்வ கலாசாலைகள்" என்ற தலைப்பில் மகாத்மா காந்தி இன்றைய "ஹரிஜனி"ல் எழுதுவதாவது:-

மாகாணங்களில் புது சர்வ கலாசாலைகளை ஸ்தாபிக்க அளவு மீறிய ஆசை ஏற்பட்டிருப்பதுபோல் தெரிகிறது. கூர்ஜரம், மஹராஷ்டிரம், கன்னடம், ஒரிஸா, அஸ்ஸாம முதலியவை தத்தம் பாஷைகளுக்கு சர்வ கலாசாலைகளைக் கோருகின்றன அந்த அரிய மாகாண பாஷைகளும் அவற்றைப் பேசும் மக்களும் பூரண வளர்ச்சி அடைய வேண்டுமானால் அவ்வித சர்வ கலாசாலைகள் இருக்க வேண்டுமென்று நான் நம்புகிறேன்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் அனுவசியமான அளவுக்கு அவசரபடுகிறோம். பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களை அமைப்பதே முதல் படியாகும். தனி நிர்வாகம் ஏற்பட்டதும் சர்வ கலாசாலைகளும் இயல்பாக ஏற்படுவிடும்.

புதிய சர்வ கலாசாலைகளுக்கு சரியான உஸ்திவாரம் இருக்க வேண்டும். பாடசாலைகளிலும் காலேஜ்களிலும் மாகாண பாஷைகளில் போதிக்க வேண்டும.

நாம் அரசியல் ரீதியில் விடுதலையடைந்திருந்த போதிலும் மேற்கத்திய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையவே இல்லை. மேற்கத்திய நாடுகள் மூலம் நன்மை எதுவுமே ஏற்படாதென்ற அபிப்பிராயம் எனக்கில்லை.

பொதுஜன அபிப்பிராயத்தின் புதுதிசாலித்தனமான ஆதரவு மிகவும் தேவையாகும் சர்வ கலாசாலைகளை ஸ்தாபிக்க சர்க்கார் நிதி உதவ வேண்டியதில்லையென்பது எனது அபிப்பிராயம்.

ஜனங்கள் விரும்பினால் அவர்கள் நிதியும் உதவுவார்கள் அவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட சர்வ கலாசாலைகளே நாட்டிற்கு ஆபரணமாகும்.

ஹிந்து முஸ்லிம் பிரச்னையும் இதில் சம்பந்தமுடையதாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பல மதங்களைச் சேர்ந்த மற்றவர்களும் பந்தோபஸ்துடனும் கௌரவத்துடனும் பாகிஸ்தானிலோ இந்தியாவிலோ வாழ்ந்தால் நமது கல்வி முறை நன்றாக உருவாகும். வகுப்புத் துவேஷத்திற்கு இடமில்லாதபடி செய்ய நமது சரித்திரத்தையும் மாற்றி எழுத வேண்டும். அதற்கு இன்றுள்ள சூழ்நிலை ஏற்றதாயில்லை.

சுதந்திரம் ஏற்பட்டு இரண்டே மாதமாகியிருக்கிறது அது இறுதியில் எவ்விதம் உருவாகுமென்பதை நாம் அறியோம். சர்வ கலாசாலைகளிலும் சுதந்திர உணர்ச்சி பரிபளிக்கும்படி செய்ய வேண்டும்.

மூலக் கல்வியும் முக்கியமாகும். மூலக் கல்வியின் அடிப்படை அம்சங்களாவன:

1. மூலதனத்தைத்தவிரநடைமுறை செலவை ஈடு செய்யத் தக்கவாறு மூலக் கல்வி அமைய வேண்டும்.

2. தினம் சில மணி நேரம் மாணவர்கள் ஏதாவது கைத்தொழிலில் ஈடுபட வேண்டும்.

3 மாகாண பாஷையில் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

4 எந்த குறிப்பிட்ட மதத்தையும் போதிக்காமல் பொதுவான தர்மங்களையும் ஒழுக்கங்களையும் போதிக்க வேணடும்.

5. இக் கல்வி மாணவரின் வீடுகளுக்கும் பரவ வேண்டும்.

6. ஹிந்துஸ்தானியை நாகரி, உருது, லிபிகளில் கற்க வேண்டும்.

இந்த அஸ்திவாரமான காரியங்கள் நிறைவேற வேண்டியிருப்பதால் சர்வ கலாசாலைகளை ஸ்தாபிப்பதில் நிதானம் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சூரியாவில் கடும் போர்

சர்க்கார் படைகளுக்கு உதவி

ஷாங்கை, நவ. 3

கமியூனிஸ்டுகளுக்கு எதிராக யுத்தம் நடக்கும் மஞ்சூரியத் தலைநகரான சாங்சுனிற்கு அண்மையில் பலங்கொண்ட ஒரு சீனப் படை வந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஜப்பானுக்கெதிராக சண்டை செய்வதற்கு இந்தியாவிலே அமெரிக்கரால் பயிற்றப்பட்டவர்களே இப்படையில் இருப்பதாக கூறப்படுகிறது. மஞ்சூரியத் தலைநகரிலிருந்து தென் பகுதியாக கமியூனிஸ்டுகளைத் துரத்துவதில் ஈடுபட்டுள்ள படையுடன் இப்படை வந்து சேருமென்றும் கிரின் என்னுமிடத்திலே பெரிய யுத்தம் நடப்பதாகவும் கூறப்படுகிறது.

முந்தி கமியூனிஸ்டுகளின் தலைமை காரியாலயமாக இருந்த ஜெனன் நகரத்திலிருந்து சுமார் 100 மைல் தூரத்திலுள்ள வென்ஸி மாகாணத்தில் யூலின் என்னுமிடத்துக்கு இரு கடற்படையினரும் உதவிப் படைகளை அனுப்பியுள்ளனர். சர்க்கார் விமானப் படை சப்ளைகளை விமான மூலம் கொடுத்துள்ளது. நிலைமை மிக மோசமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

கமியூனிஸ்டு பிரதம தளபதி ஜெனரல் சூ டேஷிற்கு அடுத்தபடியாக உள்ள ஜெனரல் ஹோலாங் என்பவர் இப்பகுதியில் தலைமை வகித்து சுமார் 10 பிரிவுகள் படையினரை நடத்துவதாகத் தெரிகிறது. ஷன்டங் மாகாணத்தில் கொரில்லாக்களின் வேலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

வெய்காலி என்னும் துறைமுகப் பகுதியில் கமியூனிஸ்டுகள் இரவு நேரத்தில் தாக்குதலை ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது.

சீனத் தரைப்படைக்கு பயிற்சி

அமெரிக்க இராணுவ அதிகாரிகள் போமோசா தீவில் சீன தரைப்படைக்கு பயிற்சி அளிப்பதற்கு அமெரிக்கா வெளியிட்ட செய்திபற்றி சீன சர்க்கார் வட்டாரங்களில் இந்த உதவி முன் குறிப்பிட்ட இராணுவ பொருளாதார உதவியுடன் சேர்க்கப்படமாட்டாதென்று பேசிக் கொள்ளப்படுகிறது. இந்த உதவியைதேசிய பாதுகாப்பு மந்திரி வரவேற்பதாக நெருங்கிய வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இந்தோனேஷியாவில் சீனர் பாதுகாப்புப் பிரச்னை

இந்தோனேஷியாவில் டச்சு சர்க்காருக்கும் இந்தோனேஷியருக்கும் இடையில் நடக்கும் போராட்டங்களினால் அங்குள்ள சீன மக்கள் கொல்லப்படுவதுடன் பொருள்களும் அழிக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றன இதற்காக அங்கு ஒருகூட்டு சீன-டச்சு, சீன-இந்தோனேஷிய சமாதான பாதுகாப்புப் படையை அமைக்க சீன சர்க்கார் விரும்புகின்றதென்று அயல் நாட்டு உதவி மந்திரி தெரிவிக்கின்றார். இந்த ஆலோசனைக்கு டச்சு, இந்தோனேஷியர்களின் உடனடியான சம்மதத்தை தெரிவிக்கும்படி கேட்டுள்ளார்.

(ராய்ட்டர்)

கப்பல் தளத்தில் கலந்துரையாடுவர்

டச்சு-இந்தோனேஷியப் பிரதிநிதிகள் சந்திப்பு

பட்டேவியா, நவ. 2

ஐ. நா. ஸதாபனத்தின் மூன்று தேச கமிஷனின் ஆதரவின்கீழ் பட்டேவியாவிலை மேற்குப் பகுதியில் கடலில் நங்கூரமிட்டுள்ள ஓர் கப்பலில் டச்சு, இந்தோனேஷியப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்று தெரிகிறது.

ஆகஸட் நாலில் யுத்தத்தை நிறுத்துமாறு ஐ. நா. சபை கட்டளையிட்டதலைவர்? அதனை அமுல் நடத்த டச்சு இந்தோனேஷியத் தருப்புகள் தம்முள் நேரடியாகவோ. அல்லது கமிஷன் மூலமாகவோ கலந்து கொள்ளுமாறு ஐ. நா. சபை ஓர் ஆலோசனைத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

(ராய்ட்டர்)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சர்வதேசப் பொருளாதாரச் சூறுவளியில் தவிக்கும் இலங்கை

ஏகபோகஆதிக்கஆசையால்ஏகாதிபத்திய முறையுடன் உறவாடும் யூ. என். பி.

ஏழைகள் வயிறு காய, முதலாளி வர்க்கத்திற்கும் அந்நியருக்கும் உதவிபுரியும் நடவடிக்கைகள்

குருநாகலைத் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு ஸ்ரீநிசங்கா கே சி. யின் பத்திரிகையான "தெஹ லதிவ" (2-11 47) ஆசிரியத தலயங்கத்தின் சுருக்கமான தமிழாக்கம்

பலநூற்றாண்டுகளாககுடியேற்ற நாடுகளை குறையாடிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இப்போது இன்ஸால்வெண்டாகிக் கொண்டு வருகிறது. தள்ளாடிக்கொண்டிருக்கிற ஏகாதிபத்தியத்திற்கு, தன்கதியற்று உளுத்துப்போய்க் கொண்டிருக்கிற சேனநாயக்கா அரசாங்கம் முட்டுக்கொடுக்க துள்ளிக்கொண்டிருக்கிறது.

இந்நிலைமையில் இலங்கைப் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களின் விலைஅதிகரித்துக்கொண்டே வருகிறது இப்படியானால், வாழ்க்கைச்செலவை தாங்கமுடியாத பொதுமக்கள் குட்டிச் சுவராய்போய் விடுவார்களென்பது விளையாட்டல்ல.

இன்று அத்தியாவசியப்பொருட்களின் உற்பத்திக் குறையினால் திண்டாடும் பிரிட்டிஷ் அரசாங்கம்!என்ன செய்கிறது? சுதந்திரம் கொடுத்ததாக சொல்லப் படுகிற நாடுகளில் பிரயோசனம்எடுப்பதற்கு அடாத்தான முறையில்சதிசெய்கிறது. ஸ்டாபோர்டகிரிப்ஸ, ஹியூடால்டன், ஏர்னஸ்ட் பெவின் போன்றோர்களின்மேற்படி சதியில், இலங்கையும் விதிவிலக்காகவில்லை. தமது வேலையில் பங்கெடுத்துக் கொள்ள இலங்கைப் பிரதம மந்திரியையும் இவர்கள் தூண்டிக்கொண்டிருப்பது ஆச்சரியமல்ல

பெட்ரோல் விலையை அதிகரிப்பதற்கு இரண்டு மாதங்கள் சென்றதாயினும், ஏழைமக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு ஓரே ராத்திரிதான் பிடித்தது. ஏழைகள் தொண்டையை நனைத்துக் கொள்ளுகிற தேயிலைத் தூளைக்கூட, விலையில் அதிகரித்திருக்கிறார்கள். இதற்கிடையில் அரசாங்க தலைவர்கள் தம்முடைய உறவினர்களை அவர்களின் பட்டப்பதவிகளை-சுகபோக வாழ்க்கையை காப்பாற்றுவதில் தீவிரமாக நடவடிக்கை யெடுத்து வருகிறார்கள்

இது மாத்திரமா, ஜவுளிக் கட்டுப்பாட்டு அதிகாரியின் ஆலோசனையைக் கூட லட்சியம் பண்ணாமல், பெரிய ஜவுளி வியாபாரிகளுக்கு சகல உதவிகளையும் செய்கிறார்கள். இத்தேச மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கும்-அவர்கள் கஷ்ட நஷ்டப்படுவதற்கும் காரணம் அரசாங்கமே என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இலங்கை மக்களின் வாழ்க்கையில் தாங்கமுடியாத கஷ்ட நஷ்டம் உண்டாவதற்கு ஒரே காரணம், இன்ஸால்வெண்டாகிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையை முற்றும்பின்பற்றுவதேயாகும்

மாஜி பிரதம மந்திரி சர்ச்சிலின் கெடுபிடியான போக்காலும், அமெரிக்க டாலர் கட்டுப்பாட்டினாலும் இன்ஸால்வெண்டாகி திண்டாடும் பிரிட்டன், இப்பொழுது அமெரிக்க தொழில்-வர்த்தக சொந்தக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு மலயா, இந்தோனேஷியா, இலங்கை, பாலஸ்தீன், கிரீஸ், மால்டா ஆகிய நாடுகளில் வறுமையை ஒழிக்க பாடுபடுவது ஒரு வேடிக்கையென்றாலும், அமெரிக்காவிலிருந்து டாலரை வெளி நாடுகளுக்கு செல்லாதபடி தடுப்பதற்கே இந்த சூழ்ச்சியெல்லாம்.

இதன்படி இலங்கையின் தேசிய செல்வத்திற்கு மூலாதாரமாய் இருக்கிற தேயிலை, கொப்பரு, ரப்பர், கறுவா முதலிய பொருட்களை, திரு. சேனநாயக்காவின் விருப்பப்படி பிரிட்டன் நிர்ப்பந்தமாக பெற்றுக் கொள்ளுகிறது. இதன் பின், இப்பொருட்களை வாங்கின விலையிலும் பார்க்க மூன்று நாலு மடங்காக விலையைக் கூட்டி பிரிட்டன் அமெரிக்காவுக்கு விற்பனை செய்கிறது. இந்த முறையின்படி, நம் தேசத்து ரப்பர், தேயிலை, கொப்பரு, கறுவா முதலிய பொருட்களுக்கு அமெரிக்காவிடமிருந்து பிரிட்டன் பெறும் தொகையில், ஆறிலொரு பங்கோ, ஒன்பதிலொரு பங்கோ தான் இலங்கை பெற வேண்டியிருக்கிறது.

இந்த வர்த்தக முறைப்படி, இலங்கையிலிருந்து சூழ்ச்சியாக பிரிட்டன் பெறும் வளை பொருட்களை அமெரிக்காவுக்கு விற்பனை செய்வதினால் எத்தனையோ மடங்கு லாபத்தை பிரிட்டன் பெறுகிறது. எனினும் ஏதோ இலங்கையினால் பிழைக்கிற பிரிட்டனுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம் என்று திரு சேனநாயக்கா உரத்த குரலில் மார்புதட்டி உதாரமாகப் பேசுகிறார்.

சீனக் கண்ணாடியில் தெரிந்தவை

இப்பொழுதெல்லாம் நாட்டுப்புற மக்களிடையேயும் சமதர்மக் கொள்கை பரவி வருவதைக் கண்டு பயந்த யூ. என். பி. யினர் உள்நாட்டு மந்திரியார். ஒலிவரை ஆலோசனை கேட்டார்கள். அதற்கு நாட்டுப்புறங்களில் இடபோதிருக்கிற புனருத்தாரண-கிராமாபிவிருத்தி-நன்மை விருத்தி-கூட்டுறவு சங்கங்களையும், இன்னும் பல பெயர்களில் புதிய இயக்கங்களை உண்டாக்கியும் உள்நாட்டு இலாக்காவோடு சம்பந்தப்படுத்தி விட்டால் அதிகாரத் தோரணையிலும் அரசாங்கச் செலவிலும் சமதர்மக் கொள்கையை ஒழித்துக் கட்டுவதோடு, யூ. என். பி. யையும் வலுப்படுத்தி விடலாம் என்று ஸேர் ஒலிவர் கூறியதாக ஹறுமந்தனன் சீனக்கண்ணாடியில் தெரிந்தது. இன்னும் சீனக் கண்ணாடியில் மற்றமக்கமாக தெரிந்த விஷயமென்னவென்றால் "நூற்றுக்கு நூறு-முற்றாக- பூரணமாக—இலங்கை எப்பொழுது இங்கிலீஷ்காரரிடமிருந்து விடுதலைபெற்று சர்வ சிங்கள ராஜ்யம் ஏற்படுகிறதோ அன்றுதான் சிங்களக் கொடியை உயர்த்தவேண்டுமென்றும், அதற்கிடையில் இங்கிலீஷ் கொடியோடு சிங்களக் கொடியையும் உயர்த்தி இன்னும் அவமானப்படக் கூடாதென்றும் சாதி சிங்கள மக்கள் ஏகோபித்து அபிப்பிராயப்படுகிறார்கள்" என்பதாகும்

சர்க்கார் குமாஸதாக்கள் சங்க தடை நீக்கம்

கொழும்பு, நவ. 4

பொது சர்க்கார் குமாஸதாக்கள் சங்கத்தின் மீது விதித்திருந்த தடையை ரத்து செய்து விடடதாக கவர்னர் அறிவித்துள்ளாரென்று அறியப்படுகிறது. சனிக்கிழமை சர்க்கார் குமாஸதாக்கள் சங்கக் கூட்டமொன்றில் வைததிய இலாகாவைச் சேர்ந்த திரு டி. எஸ். ஜெயவர்தனு தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்கள்

நன் கொடைகள்

திருவாவடுதுறை, நவ. 3—

திருவாவடுதுறை ஆதீனப ஆதீன கர்த்தர்களான ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னதி மஹா சன்னிதானம் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் கட்டிட நிதிக்கு ரூபாய் ஐயாயிரமும், மகாத்மா காந்தி அடிகளின் பஞ்சாப் அகதிகளுக்கம்பளி நிதிக்கு ரூபாய் ஆயிரமும், தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ டி. கே ஸ்ரீநிவாஸ அய்யரிடம் அளித்துள்ளார்.

எட்டயாபுரத்தில் மஹா கவி பாரதியாரின் மணிமண்டபத்திறப்பு விழா சமயத்தில் மஹா சன்னிதானத்தால் அளிக்கப்பட்டுள்ள 2 வெள்ளிக் குத்து விளக்குகள், எட்பொழுதுப் தூங்கா விளக்குகளாக ஒளி வீசிக் கொண்டிருப்பதற்காக ரூபாய் 500 ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் திட்டத்திற்கு எதிர்ப்பு

சிங்கப்பூர் சீன வர்த்தக மண்டலத்தின் கடிதம்

சிங்கப்பூர், நவ 2

அக்டோபர் 20ல் சிங்கப்பூரில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலைச்சுட்டிக்காட்டிபுதியபிரிட்டிஷ் அரசியல் திட்டததை வாபஸ் பெற்று ஒரு ராயல் கமிஷனை சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்குமாறு சிங்கப்பூர் சீன வர்ததக மண்டலம் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிடுள்ளது.

மலேயர், சீனர், இந்தியர் என்ற வேறுபாடில்லாமல் ஒன்றுபட்டு, நடந்த 20-மதேதி ஹர்த்தால் சமூக உணர்ச்சியோடு அல்லது வகுப்புவாத உணர்வோடு பிரிட்டிஷ் திட்டம் எதிர்க்கப்படவில்லை. மலேய ஒற்றுமை உணர்ச்சி அலை பொங்கி வருவதால்தான் அது எதிர்க்கப்படுகிறது என்பதைக் காட்டி விட்டதாக இக் கடிதம் கூறுகிறது.

சிங்கப்பூரை மலேயாவுக்கு வெளியே தள்ளிவைததிருப்பதையும் வர்த்தக மண்டலத்தார் எதிர்ததுள்ளனர். (ராய்ட்டர்)

இந்திய சர்க்கார் கடன் கோரிக்கை

15 வருஷ தவணையில் ரூ. 40 கோடி கேட்கிறது

புதுடில்லி, நவ 3—

இந்திய சர்க்கார் இரண்டேமுக்கால் சத விகிதம் வட்டியில் ரூ 40 கோடி கடன் கோருகிறது. 100 ரூ பங்குகள் வீதம் நவம்பர் 15ல் இது வாங்கப்படும் 1962ல் இது திருப்பித் தரப்படும்.

வட்டிக்கு வருமான வரி உண்டு மூன்றரை சத விகிதம் வட்டியில் வாங்கப்பட்ட கடன்கள் 1947 நவம்பர் 15ல் திருப்பச் செலுத்தப்படும் என்றும் அத்தேதிக்குப் பின்னர் வட்டி கொடுக்கப்பட மாட்டாது என்றும் சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

அன்னம் சக்கரவர்த்தினியின் பாரிஸ விஜயம்

பாரிஸ, நவ. 2

இந்தோசீனத்தில் இருந்து அன்னம் சக்கரவர்த்தினி நாயபுஓங் மார்செயில்ஸில் வந்திறங்கியுள்ளார். அவருடன் அவரது 5 குழந்தைகளும் வந்திறங்கி உள்ளனர்.

தேக சௌக்கியத்தை முன்னிட்டே தாம் பிரான்ஸ வந்ததாகவும் அவர் தெரிவித்தார். அவருடன் அவரது மூத்த குமாரரும் வந்திருந்தார். அவர் ஓர் பிரெஞ்சுக் கலாசாலையில் கல்விகற்க அனுப்பப்படுவார் என அறியப்படுகிறது.

விமான நிலையத்தில் பிரெஞ்சு அரசாங்க உத்தியோகஸதர் [illegible] (ராய்ட்டர்)

ஆசிரியருக்குக் கடிதம்

சுதந்திரமா? சுய தந்திரமா?

ஐயா!

மந்திரி சபையோரே! ஆசை காட்டி மோசம்செய்து அமைச்சர் வேலைக்கு அடிமைபடடீர்களே; ஆண்டு ஐந்துக்காக மக்களை மயக்க மந்திரம் தூவி வாழ்த்தினீர்களே! பாமும் பணத்திற்காகப பாம்பைப் போல் மகுடி கேட்டீர்களா? தேவலம் பட்டத்திற்காககேலிக் கூத்தாட முற்பட்டீர்களே!

போனதெல்லாம் போகட்டும், உங்கள் பணமும் பட்டமும் உங்களோடுதானே,எங்கட்டுமா? ஒருபோதும் இல்லை. ஆனால் எங்கள் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சவல்லவாறுவ்வளவு அங்கததவரைக் கொண்ட மந்திரி சபையை அமைத்தீர்கள். இப்படியான சிறு சனத்தொகையைக் கொண்ட எந்தத தேசமாவது உங்களைப்போல் ஓர் மந்திரி சபையை அமைததுள்ளார்களா? இவற்றைச் சிறிதாயினும் சிந்தித்தீர்களா? அதுவும் இல்லை.

மக்களால் விருப்பப்பட்ட நீங்கள்தான் மந்திரி சபையில் அமர்ந்தீர்களென்று மக்களால் வெறுக்கப்பட்டோரையுப் அமர்த்தனீர்களே இது நியாயமா?

நாட்டைத் துண்டாடும் கொள்கையையும், நாடு கடத்துத் திட்டத்தையும், சாதிமதபேதத்தையும், செல்வர், வறியர்என்ற கொள்கையையும் பரப்பியவுளைச் சாமிகட்கும் உததியோகம் கொடுத்தீர்களே. இது நியாயமா?

நிற்க! தற்போது வெள்ளப் பெருக்கால் உயிர்ச்சேதம்உடற்சேதம் பொருட்சேதம் அடைந்த இருபதினாயிரம் மக்கட்கு உங்கள் மந்திரிசபை ஒதுக்கியது மூன்று லட்சம் ரூபாய் ஆனால் உங்கள் பிரதமரின் வீடிற்கும், நந்த வனத்திற்கும் சோடனைக்குமாக ஒதுக்கியது இரண்டு லடசம் ரூபாய் இது நீதியா?

இன்று நம் நாட்டில் மாதக் கணக்கிலும் வழி நடந்து தொலைக்காமல் பாமர மக்கள் திண்டாடுகின்றார்கள். ஆனால் பிரதமரின் உல்லாசப் பிரயாணத்திற்கு நாற்பதாயிரம் ரூபாவதுக்கீனீர்களே இது நீதியா? நீதியில்லாவிட்டாலும் பரவாயில்லை. இன்னும் அதே தொகையைப போட்டு ஓர் ஆகாயரதத்தை அமர்த்தக கொடுங்கள்.

அன்றியும் அரசிளங குமாரியின் அரண்மனைக் காதல் பகிரங்க நாடகததிற்கு ஐந்து மூன்று ஆயிரம் அளித்தீர்களே, இங்குள்ள ஓர் ஏழைப் பெண்ணுக்கு அதில் ஒரு பங்கு கொடு பீர்களா?

அல்லாமலும் அண்மையில் இந்தியா சென்ற இலங்கைத் தூது கோஷ்டிக்குப் பதின்மூவாயிரம் கொட்டிப் பறக்க வைத்தீர்களே. இது நீதியா?

கேவலம்! பொது மக்கள் சேவைக்காய்ச் சென்றீர்களா, பொருள் ஈட்டச் சென்றீர்களா? பட்டம் பதவிக்காகச் சென்றீர்களா? பாமரரின் இடர் தீர்க்கச் சென்றீர்களா? அப்படியானால் ஏன் மக்களை வெறுக்கின்றீர்கள் உங்களை வெற்றி பெறவும, உங்கள் எதிரிகளை புறமுதுகு காட்டி ஓடவும் செய்தது உங்கள் மந்திரிசபையா? அன்றேல் உங்கள் ஊர் ஏழை மக்களா?.

"நெஞ்சில் உரமுமின்றி நேர்
மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி
கிளியே-
வாய்ச்சொல்லில் வீரரடி"

என்று கூறிய அமர கவியின் கனவை நனவாக்க முற்பட டீர்களா? ஆம். ஓர் சிலர் காட்டி விடடார்கள். இன்னும் சிலர் காட்டப்போகின்றார்கள் வேறு சிலர் காட்டியே தீருவார்கள், இப்படியானவர்கட்கு அவர்கள் தாய் நாடே சவ நாடாய் விடுமா, ஐயோ பாவம்! மனித வாழ்க்கையே நிலையற்றது, இம் மந்திரி சபை நிலையுள்ளதா? அறிவைப் பறிகொடுத்த அருமைச் சகோதரர்களே! உத்தியோக உயர்வைப்பெற்ற துரையவர்களே! ஊரைக் காக்க முற்பட்ட உண்மைத் துரையவர்களே! உங்கட்கு நன்மை வேண்டின் ஊரையும் அதன் சேவையையும் பெறுங்கள். ஊருக்கு நன்மை வேண்டின் உங்களையும் உங்கள் உயர்வையும்

தென்னாப்பிரிக்க இந்திய பெண்கள் போராட்டம்

அடுத்த வாரம் சத்தியாக்கிரகம் செய்ய ஏற்பாடு

ஜோகன்னஸ்பர்க், நவ. 3

டர்பனில் அடுத்தவாரம் சத்தியாக்கிரகம் செய்வதென டிரான்ஸவாலில் உள்ள பல இந்தியப் பெண்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே சிறை சென்றிருக்கும் ஸ்ரீமதி பஹாத், ஸ்ரீமதி மாரியம் சுசாலா, ஸ்ரீமதி காதி முதலியோர் இந்த கோஷ்டியில் சேருவார்கள். ஸ்ரீமதி காதி என்பவர் டாக்டர் டாடு வின் சகோதரியாவார்.

நேச ஸ்தாபனத்தில் இந்தியா தென்னாப்பிரிக்காவின்கட்சியை எடுத்து வாதித்துக் கொண்டிருக்கையில் தென்னாப்பிரிக்காவில் போராட்டம் நடத்துவது பற்றி தாங்கள் பெருமை கொள்ளுவதாக இப்பெண்கள் ஸ்ரீமதி பண்டிட்டுக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

வெறுங்கள். ஒருவனுக்காக உலகம் அடிமைப்படுவதா? உலகத்திற்காக ஒருவன் அடிமைப்படுவதா!

பகிரங்க மேடையில் நடனம் செய்ய முற்பட்டீர்கள். சபையில் உள்ளோர் ஏளனம் செய்ய நடனம் செய்வீர்களா? தேசநன்மைக்காக, அதன் விடுதலைக்காக, மக்களின் சுதந்திரத்திற்காக உங்கள் மந்திரிசபை உதயமாயிற்று?

அன்றேல் ஓர் சில குடும்பத்திற்காக, அவர்கள் உயர்விற்காக, உறவினர் கொண்டாட்டத்திற்காக, நாட்டைத் துண்டாடும் திட்டத்திற்காக, சிறுபான்மை மக்களை அடிமைப்படுத்துவதற்காக, அயல்வீட்டானை நாடு கடத்துவதற்காக, நாட்டு மக்களைவதைப்பதற்காக, அவர்களின் பணத்தை டாம்பீகமாய்ச் செலவு செய்வதற்காக பரம்பரை தவறாது பட்டம் பெறுவதற்காக மந்திரிசபை உதயமாயிற்று?

தேசத்தின் நன்மைக்காஞல் துரையவர்களே! நன்மையைக் காட்டித் தீருங்கள். இன்று உலகம் அணுக் குண்டுக்கடிமையாயிற்று. ஆனால் இலங்கையோ அத்துடன் நில்லாது ஓர் சில பணக்கார கும்பலுக்கும் அடிமையாயிற்று. சிறிது சிந்தித்துப்பாருங்கள், உண்மை தெளிவாகும்.

ஏழை மக்களே! அருமைச் சகோதரர்களே! நாட்டைக் காப்பது உங்கள் கடமை என்றபடி எல்லோரும் நம் நாட்டிற்காய் நம் விடுதலைக்காய் நம் நலன்களுக்காய் ஒன்று கூடி உழைக்க முற்படுங்கள்; இறுதி வெற்றிக்கே! கொடும் வாள் கொண்டு செய்ய இயலாத காரியத்தை எழுதுகோல் கொண்டு செய்யலாம்.

இங்ஙனம்,
தேசிய இளைஞன்.
சேவியர்

கொழும்பு
1-11-47

இந்தியா - இலங்கை உறவு

நேரு-கிரி சம்பாஷணை

புதுடில்லி, நவ. 2—

இந்தியா - இலங்கை உறவு சம்பந்தமாக இன்று நேருவை இலங்கையில் இந்தியாவின் பிரதிநிதியான ஸ்ரீ வி. வி. கிரி, சந்தித்துப் பேசினார்.

டிசம்பர் 2-வது வாரத்தில் இலங்கை பிரதமர் ஸ்ரீ சேனநாயக்காவை டில்லியில் நேரு சந்தித்துப் பேசுவார்.

நவம்பர் 9ம் தேதி இலங்கைக்குப் புறப்படும் முன்னதாக நேருவுடன் ஸ்ரீ கிரி மேலதிகொண்டும் சம்பாஷணைகள் நடத்துவார்.

சிர
நேத்திராஞ்சனத் தைலமே
சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்தியிர் கொடுத்து காப்பாற்றியது

சப்தீவு வாலிப சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு செல்லுவதாவது:

'சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணிலும் கடும் வலித்தம் ஏற்பட்டு பல்வித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே. ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இந் கிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன். இத் தைலத்தின் அபூர்வ குணத்திற்கும் நிறமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்''. ஒப்பம்

திரு. வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர
நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இரைமல், இளைப்பு, நரம்புத் தளிர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அல்மா, காசம், நீர் முழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடித மூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25
4 ,, ,, ரூ. 5-50

தயாரிப்பாளர்:-
எம். கே. ஜெகநாதன்,
யூனிசி கண் வைத்தியர்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொறி விற்பனைக்கு

சவர்லட் 2, 2½, 3, 3½ டன் லொறிகள் விற்பனைக்கு இருக்கின்றன. பொடி முதல் சகலமும் புதியது.

எம் எஸ். மெண்டிஸ், 238, பஞ்சிகாவத்தை ரோட், மருதானை.

இளவரசி திருமணம்

சினிமாப் படமெடுக்க மன்னர் அனுமதி

வின்சர் கோமகன் விஜயமாகார்; ரஷியப்பிரதிநிதிகலந்து கொள்வார்

லண்டன், நவ. 3

நவம்பர் 20-ம் தேதியன்று எலிஸபெத் இளவரசிக்கும் லெப்டினன்ட் பிலிப் மவுண்ட்பேட்டனுக்கும் வெஸ்ட் மினிஸடர் தேவாலயத்தில் திருமணச் சடங்கு முடிவுற்றதும் ஊர்வலம் முதலான வைபவங்களைச் சினிமாப் படம் பிடிக்க ஜார்ஜ் மன்னர் அனுமதியளித்திருக்கிறார். அவை டெலிவிஷன் மூலமாகவும் காட்சி பரப்பப்படும். ஆனால் கோவிலுக்குள் நடைபெறும் மதச் சடங்கு சினிமாப் படம் எடுக்கப்படமாட்டாது. டெலிவிஷன் மூலமான காட்சியும் பரப்பப்படமாட்டாது இன்றலரர்டு சபையினர் இளவரசிக்கு நடைபெறவிருக்கும் திருமணத்தைப் பாராட்டி மன்னரிடம் வாழ்த்துச் செய்தியை சமர்ப்பித்தார்கள்.

வின்சர் கோமகன்

காதலுக்காக சனாசனத்தைத் துறந்து அமெரிக்க மாதை மணம் புரிந்து இல்லற வாழ்க்கை நடத்தும் வின்சர் கோமகனும் வின்சர் கோமகனும் எலிஸபெத் இளவரசி திருமணத்திற்கு விஜயம் செய்ய மாட்டார்கள். அப்பொழுது அவர்கள் அமெரிக்காவிலிருப்பார்கள் இவர்களுக்கு கலியாண அழைப்பும் அனுப்பப்படவில்லை.

சுவிடன் ராஜா, ராணி விஜயம்

லண்டன், நவ 3

இளவரசி எலிஸபெத் கலியாணத்திற்காக சுவிடன் தேசத்து மன்னரும் மகாராணியும் இன்று லண்டன் வந்து சேர்ந்தார்கள். கலியாணத்திற்கு விஜயம் செய்வதாக ராஜ குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ரஷியப் பிரதிநிதி விஜயம் செய்வார்

எலிஸபெத் இளவரசி திருமணத்தின்போது சோவியத் ரஷியாவின் பிரதிநிதியாக பிரிட்டனிலுள்ள சோவியத் ஸ்தானிகர் ஜாக்கி சாரூபின் விஜயம் செய்வார்.

ஒன்றரை லக்ஷம் வருஷத்திற்கு முந்திய மனிதன் எலும்பு

பிரான்ஸில் அகப்பட்டது

பாரிஸ், நவ 2—

தென் மேற்கு பிரான்ஸ் மான்ட்புரன் என்ற இடத்திலுள்ள ஒரு குகையில் 15,000 வருஷத்திற்கு முன் பிருந்த மனிதனின் கல்லறையில் புதைத்த மண்டை ஓடு முழுவியனவற்றை ஸ்ரீமதி ஹென்றி மார்டின் என்ற ப்ரெஞ்சு புதை பொருள் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கிறார்.

இந்தியாவின் கலைப் பொக்கிஷம்

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் கொண்டுவந்தது

பிளைமவுத், நவ, 3

இன்று பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் இந்தியாவின், அரிய அற்புதமான கலைப் பொக்கிஷங்களை ஏற்றிக்கொண்டுவந்து சேர்ந்தது அடுத்த மாதம் பிரிட்டிஷ் ராஜ்ய சங்கத்தார் நடத்தும் இந்தியக் கலைப் பொருட் காட்சியில் இவை வைக்கப்படும். கி. மு ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து நாளதுவரை இந்தியாவின் கலை வல்லுனர்கள் சிருஷ்டித்த நிகரிலாக்கலைப் பொருட்கள் இப்பொக்கிஷத்திலிருக்கின்றன பொருட் காட்சி முடிந்ததும் இக்கலைப்பொருட்களை மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படும்.

[ராய்ட்டர்]

பாமிதத் பெர்லின் செல்லக் கூடாது

கமியூனிஸ்ட் தலைவர் மீது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தடை

லண்டன், நவ 3

பிரிட்டிஷ் கமியூனிஸ்ட் கட்சியின் உப தலைவரும், அமரியுடன் 3 தர்தலில் போட்டியிட்டு அகில உலக பிரசித்திபெற்ற அறிஞரும், இந்திய சுதந்திரத்தின் நீண்டகால ஆதரவாளருமான ரஜனி பாமிதத் பெர்லினில் நடைபெற்ற சோஷியலிஸ்ட் ஐக்கியக் கட்சியின் மகாநாட்டுக்குப் போவதற்கு அனுமதி அளிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்து விட்டது. இம்மகாநாடு ரஷிய ஆதரவில் நிகழ்ந்ததென்றபடி அவர் அங்கு போவதால் அங்கு முகாம் போட்டிருக்கும் வல்லரசுகளின் நோக்கங்களுக்கு அரணால் எவ்வித உபயோகமும் கிடையாது என்றும் அதனாலேயே அனுமதி மறுக்கப்பட்டதென்றும் இன்று அயல் நாட்டிலாகா உதவி மந்திரியால் காமன்ஸ் சபையில் கூறப்பட்டது

மேற்படி தகவல் கமியூனிஸ்ட் பார்லிமெண்டு மெம்பரில் பிராட்டின் கேட்ட கேள்விக்குப் பதிலாகவே கூறப்பட்டது. (ராய்ட்டர்)

சதியாலோசனையின் மூளை

ஆங்சான் கொலை வழக்கில் ஊ சா மீது குற்றச்சாட்டு

ரங்கூன், நவ 3

பர்மிய அட்வகேட் ஜெனரல் கடந்த ஜூலை மாதம் ஆங்சானையும் இன்னும் சிலரையும் கொலை செய்ததாக ஊ சா மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரியும் அவரது 8 ஆதரவாளரும் குற்றவாளிகள் என்பதை ஸ்தாபிக்கப்பட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்.

இதுவரை அரசாங்க சார்பில் 48 சட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஊ சாவே இச் சதியாலோசனையின் மூளை என்று அவரால் வர்ணிக்கப்பட்டது

இதற்கு ஆதரவாக எதிரிகளில் ஒருவர் உண்மையைக் கக்கி அரசாங்கச் சாட்சியாக மாறியதும், இதர ஐந்து எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதும் இதர சாட்சியங்களின் வாக்குமூல விபரங்களும் எடுத்துக்காட்டப்பட்டன. "ஊ சா வீட்டிலே கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். கொலையாளிகளின் ஜீப்கார், ஊ சா வீட்டிற்குப் போனதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் வீட்டிற்குச் சமீபமுள்ள வாவியில் இக் கொலையில் உபயோகிக்கப்பட்ட துப்பாக்கிகள் காணப்பட்டன" என்று அட்வகேட் ஜெனரல் கூறினார்.

முடிவான குற்றச் சாட்டைத் தாக்கல் செய்வதற்குமுன் நடத்தப்பெறும் ஆரம்ப விசாரணையே இப்போ முடிந்துள்ளது

நாளை விசாரணையின்போது சர்க்கார் தரப்புச் சாட்சியாக மாறிய எதிரி தரப்பு வக்கீல் குறுக்கு விசாரணை செய்யப்படுவார்.

(ராய்ட்டர்)

எகிப்திய அரிசி விநியோகம்

ஐந்து வாரம் தாமதமாகும்

கொழும்பு, நவ 4

எகிப்திலிருந்து இலங்கைக்கு வந்த அரிசி இப்பொழுது நுறைமுகத்தில் இறக்கப்படுகின்றன இவற்றைப் பொதுமக்களுக்கு விநியோகிப்பதை ஈமார் ஐந்து வாரங்களுக்கு ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளனர் எகிப்தில் காலரா நோய் பரவியிருப்பது காரணமாக இங்கிருந்து வந்த அரிசியை தகுந்த சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபின்னர் விநியோகிக்கும்படி சுகாதார இலாகா கூறியுள்ளது.

இலங்கைக்கு 10,000 டன் எண்ணெய்

கொழும்பு, நவ 4

இன்று காலை கொழும்பு துறைமுகம் வந்து சேர்ந்த "ட்ரோகாஸ" என்னும் எண்ணெய்க் கப்பல் இலங்கைக்கு 10,000 டன் எண்ணெய் கொண்டு வந்துள்ளது.

கமியூனிஸ்ட் கப்பல் சோதனை

தங்கம், பணம், சோதமை கண்டுபிடிக்கப்பட்டன

ஷாங்கை, நவ 3

சீனக் கமியூனிஸடுகளின் உள்நாட்டுப் போருக்கு உதவி செய்யும் நோக்குடன் சென்று கொண்டிருந்த ஒரு கப்பல் ஷாங்கை துறைமுகத்தில் வழிமறித்துச் சோதனையிடப்பட்டது. அப்போது அங்கு 116 அவுன்ஸ தங்கம், ஐயாயிரம் கோடி சீன டாலர்கள், பலநூறுக் கணக்கான கோதமை மூடைகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

கமியூனிஸடுகளுக்குப் பொருள்களைச் சட்ட விரோதமாகக் கடத்திச் செல்லும் முயற்சி கடந்த 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே 20 பேர் வெடிமருந்து, பெட்ரோல், ஜவுளி ஆகியவற்றை கமியூனிஸடுகளிடம் கொண்டு சேர்க்கும் ஒரு இரகசியத்திட்டத்தில் சம்பந்தப்பட்டதாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

[ராய்ட்டர்]

பாலஸ்தீன் பிரிவினை

ரஷியாவின் 5 அம்சத் திட்டம்

லண்டன், நவ 3

இந்த வருஷ முடிவிலேயே பிரிட்டன் பாலஸ்தீனில் தனது பாதுகாப்பு முற்றாக விடுவிக்க வேண்டும் என்று ஐ. நா. சபைக் கூட்டத்தில் ரஷியாவால் ஓர் ஆலோசனை கொண்டு வரப்பட்டது. முன்னர் அமெரிக்கா அடுத்த ஜூன் 1-ம் தேதிவரை பிரிட்டிஷ் துருப்புகள் பாலஸ்தீனில் இருக்க வேண்டும் என்று கூறிய ஆலோசனையை ரஷியா நிராகரித்து விட்டது.

ரஷியா சார்பில் கூறப்பட்ட ஐந்து அம்ச பாலஸ்தீன் பிரிவினைத் திட்டம் பின்வருமாறு:

(1) ஜனுவரி 1-ம் தேதி பிரிடிஷ் அதிகார ஒழிப்பு

(2) அதன் பின் 3 அல்லது 4 மாதத்திற்குள் எல்லா பிரிடிஷ் துருப்புகளும் வாபஸ் பெற வேண்டும்

(3) பாதுகாப்புச் சபையின் எல்லா அங்கத்தினரும் கொண்ட ஒருகமிஷன் பாலஸ்தீனுக்கு உடனே செல்ல வேண்டும்.

(4) கமிஷனால் தற்காலிக யூக அராபிய அரசாங்கசபைகள் நிறுவப்படவேண்டும்.

(5) ஒரு வருஷத்திற்குமேலே இடைக்கால நிலைமை நீடிக்கக் கூடாது

சோவியத் திட்டப்பிரகாரம் குறித்த தற்காலிக அரசாங்க சபைகள் ஐ. நா சபை மேற்பார்வையின் கீழ் அரசாங்கத்தின் மத்திய, மாநில நிர்வாக சாதனங்களை உடனே நிறுவவேண்டும் அத்துடன் ஓர் பலமான ஆயுதப் படையையும் சிறுவிமானங்களையும் அமைத்து நாட்டுவதோடு எல்லையில் கலகங்கள் ஏற்படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

[ராய்ட்டர்]

இந்திய தேயிலை 'கோட்டா'

கல்கத்தா, நவ. 3

இந்திய தேயிலை லைசென்சு வழங்கும் கமிட்டி இந்தியாவிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு கீழ்க்கண்ட அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள்:-

உற்பத்தியை அடிப்படையாகக்கொண்டு 12 5 சத விகித கோட்டாவை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கட்டுப்பாடடுக திட்டப்படி இந்த வருடம் இதுவரை அனுமதிக்கப்பட்ட கோட்டா 72 5 சத விகிதமாகும் அதிகப்படியான கோட்டா அனுமதிக்கப்பட்டதும் ஒவ்வொரு தோட்டத்திற்கும் எவ்வளவு தேயிலை கோட்டா அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்பது தெரிவிக்கப்படும். (அ-பிரஸ)

ஐ. நா. சபையில் அடிமை நாடுகள் பிரச்னை

இந்திய ரஷியத் தீர்மானங்கள் தோல்வி

ரஷிய தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு

லேக்ஸக்ஸஸ் (நியூயார்க்) நவ 4

அடிமை நாடுகளை நிர்வகிக்கும் வல்லரசுகள் தங்கள் அடிமை நாடுகள் சம்பந்தமாகச் சமர்ப்பிக்கும் தகவல்களை ஆராய்ந்து தேவையான ஆலோசனைகளைக் கூறுவதற்கு ஒரு ஸ்பேஷல் கமிட்டி நிறுவவேண்டுமென்று இந்தியப் பிரதிநிதி ஐ. நா. ஸதாபனப் பொதுச் சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இத்தீர்மானம் சாதகமாக 17 வோட்டுகளும் பாதகமாக 24 வோட்டுகளும் பெற்றுத் தோல்வி அடைந்தது

இதற்குப் பதிலாக ஆலோசனைகள் கூற அதிகாரமற்ற ஒரு தகவல் கமிட்டி மட்டும் நிறுவப்பட்டது

இத்தீர்மானத்திற்கு முன்னர் ரஷியா அடிமை நாடுகளை வைத்திருக்கும் வல்லரசுகள் தங்கள் கீழுள்ள நாடுகளின் அரசியல் நிலைமைபற்றி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று ஓர் தீர்மானம் கொண்டுவந்தது இத்தீர்மானம் சாதகமாக 17 வோட்டுகளும் பாதகமாக 23 வோட்டுகளும் பெற்றுத் தோல்வி அடைந்தது இத்தீர்மானத்தை ஆதரித்துப்பேசிய இந்திய பிரதிநிதி ஸர். மகாராஜ் சிங் பின்வருமாறு குறிப்பிட்டார்

இருநனம் செய்யப்படுமானால் அடிமை நாடுகளை வைத்திருக்கும் வல்லரசுகள் தங்கள் கீழுள்ள நாடுகளை அரசியல் ரீதியில் முன்னேற்றுவதில் தப்புள்ளே போட்டிபோட ஆரம்பிக்கும் இத்தகைய போட்டி வரவேற்கத்தக்கது.

எங்களிடம் இவ்வல்லரசுகளின் பிரதிநிதிகள் தங்கள் கீழுள்ள நாடுகள் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருவதாகவும் தாமை ஆள்பவர்களைப் பற்றியும், தமது அரசியல் முன்னேற்றத்தைபற்றியும் திருப்தி கொண்டிருக்கின்றன என்றுபகூறுகிறார்கள்.

ஆனால் சொந்த அனுபவத்தில் இது பரிபூரணமான விபரம் அல்ல என்று என்னால் உறுதி கூற முடியும். பல அடிமை நாடுகளில் அதிருப்தி வீசுகிறது. துரித அரசியல் முன்னேற்றம் வேண்டும் என்ற அவா காணப்படுகிறது.

மேலே குறிக்கப்பட்ட ரஷிய இந்தியக் தீர்மானங்கள் தர்மகர்த்தா சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னரே பொதுச் சபையால் நிராகரிக்கப்பட்டன

(ராய்ட்டர்)

மோட்டார் விபத்தில் டாக்டர் மரணம்

கொழும்பு, நவ 4

நுகயகொடையைச் சேர்ந்த புகழ்பெற்ற வைத்தியத் தொழிலாளியும் டாக்டர் ஈ. டயஸ் என்பவர் ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு மோட்டார் சைக்கிளில் போகையில் வாடகைக் கார் ஒன்றினால் கொள்ளுப்பிட்டியில் மோதுண்டதால் ரஸதாவில் மூர்ச்சையாகி விழுந்துவிட்டார் இந்த விபத்தினால் இவர் பலத்த காயங்களையடைந்தார். இவர் நேற்று மரணமானார். இவரைத் தட்டி விழத்தியது என்று கூறப்படும் காரினடியை வரை பொரளையில் வைத்த பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

கஞ்சா செடிகள் உற்பத்தி செய்தவருக்கு அபராதம்

திரிகோணமலை, நவ 4

கட்டுக்குளப் பற்றிலுள்ள செல்லாத்தா என்பவர் 17 கஞ்சா மரங்களை வைத்து உண்டாக்கியதாக தலால இலாகா இன்ஸபெக்டர் ஒருவரால் குற்றம் சாட்டிக்கொண்டு வரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் திரு டி. இராசரத்தினம் எதிரிக்கு ரூபாய் 15 அபராதம் விதித்தார்.

இதே யிடத்தைச் சேர்ந்த புஞ்ஞல் என்பவருக்கு கஞ்சா வைத்திருந்த குற்றத்துக்கு நீதிபதி ரூ 15 அபராதம் விதித்தார்.

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

புத்தம் புதிய படம்!!

இன்று காண்பிக்கப்படுவது!

மகத்தான 2-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நஸீர் திறம்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

பிரதம கைத்தொழில் நாடுகளில் ஒன்று இந்தியா

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் புதிய அமைப்பு

புதுடில்லி, நவ. 3

முன்னர் ஜினிவா சர்வதேச சங்கத்துடன் தொடர்பாக இருந்த சர்வதேச தொழில் ஸ்தாபனம் இப்பொழுது நியூயார்க்கிலுள்ள ஐக்கிய தேச ஸ்தாபனத்துடன் தொடர்புள்ளதாக அதன் அமைப்புத் திட்டம் புதிய முறையில் வகுக்கப்பட்டுள்ளது 1946ல் மாண்ட்ரீலில் நடைபெற்ற மகாநாட்டில் இப்புதிய திட்டம் வகுக்கப்பட்டது. இதை இந்தியா ஊர்ஜிதம் செய்துவிட்டது. சர்வதேச ஸ்தாபன நிர்வாகக் கமிட்டி அங்கீகரித்ததும் இத்திட்டம் அமுலுக்கு வரும். பிரதம கைத்தொழில நாடுகளில் ஒன்றான இந்தியா இந்த நிர்வாகக் கமிடியில் அங்கம் வகிக்கிறது.

ஆசியா தொழில் மகாநாடு

இன்று ஆசியா தொழில் மகாநாட்டில் ஆசிய மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த மேநாடுகள உதவிபுரியவேண்டுமென்று பாகிஸதான் பிரதிநிதி திரு எ. கே கான் பேசினார். வாழ்க்கைதரம் குறைவாகவுள்ள நாடுகளால் முன்னேற்றமான நாடுகளுக்குத் தொல்லையேற்படுமென்றும் ஆசிய மக்கள் வாழ்க்கைத்தரம் படிப்படியாக உயர்த்தப்படவேண்டுமென்றும் ஆசிய தொழில் மகாநாடு மலேயா சர்க்கார் ஆதரிக்கிறார்களென்றும் சம்பளத்தை உயர்த்துவதால் மட்டும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயராது என்றும் மலேயா சர்க்கார் பிரதிநிதி திரு ஆர். ஜி ஹெளட்டன் பேசினார்

ஆசிய தொழில் மகாநாட்டின் அவசியத்தை ஆதரித்து பிரிட்டிஷ் முதலாளிகள் பிரதிநிதி திரு ஆர் காவின் பேசினார். அத்துடன் மகாநாடு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சமீப மத்திய கிழக்கு நாடுகளின் மகாநாடு

மாண்ட்ரீல், நவ. 3

ஆசிய தொழில் மகாநாடு போல சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஆதரவால் சமீப மத்திய கிழக்கு நாடுகளின் மகாநாடொன்றும் நடைபெறும். இம்மகாநாடு நவம்பர் 24-ம் தேதிமுதல் 29 ம் தேதி வரை இஸ்தான்புல் நகரில் நடைபெறும். சர்க்கார் பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வர். இம்மகாநாட்டிற்கு இந்திய சர்க்கார் தங்கள் பிரதிநிதி கே. ஷடியை அனுப்புவார்கள். [அ-பி]

சிவனொளிபாத மலைப் பாதைக்கு மின்சார வெளிச்சம்

கொழும்பு, நவ 4

நோட்டன் பிரிஜ் பௌத்த தேவாலயத்தில் நடந்து கொண்டாடப்பட்டதின் பின் நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்ட வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் இத்திட்ட வேலைகள் வெற்றிகரமாக முடிவடைந்தபின் சிவனொளிபாத மலைக்கு வழிநெடுகிலும் மின்சார தீபம் ஏற்றி வைப்பதென சபதம் செய்து கொண்டனர். போக்குவரத்து மந்திரி திரு. ஜே எல். கொத்தலாவல தலைமையில் ஊர்வலமொன்று ஆலயத்துக்கு கொண்டாட்டத்தின் முன் சென்றது.

போலந்து எதிர்க்கட்சித் தலைவர்

மைக்கலாஜிக் பிரிட்டனை அடைந்தார்

லண்டன், நவ 3

போலந்து எதிர்க் கட்சித் தலைவர் மைக்லாஜிக் ஸடானிஸ்லோ பிரிட்டனில் வந்திறங்கியுள்ளதாக இன்று காமன்ஸில் கூறப்பட்டது.

போலந்திலிருந்து இரகசியமாகத் தப்பியோடிய மைக்கலாஜிக் எட்டு நாட்களின் பின்னர் ஜெர்மனியின் ஒரு பாகத்திலிருந்து விமான மூலம் லண்டன் வந்து சேர்ந்தார். இச் செய்தி ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டது.

மைக்கலாஜிக் சில காலம் பிரிட்டனில் தங்கியிருந்து பின் அமெரிக்கா போவார் என்று தெரிகிறது.

மைக்கலாஜிக் மீது தேசத்துரோக வழக்கொன்றிருந்ததாகவும் போலந்து சர்க்கார் அவரை விசாரணை செய்ய இருந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. இவ் விசாரணையின் காரணமாக தாம் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு கொலைத் தண்டனை அளிக்கப்படலாம் என்ற எண்ணமே அவர் நாட்டை விட்டு ஓடியதற்குக் காரணமாகும்

மைக்கலாஜிக் ராய்ட்டருக்கு பேட்டியளித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"அக்டோபர் 18 ல் என் மீதிருந்த பாராளுமன்றப் பாதுகாவல் ரத்தாகப்பட்டு ஒரு ராணுவ நீதி ஸதலத்தில் விசாரித்து கொலைத் தண்டனை அளிக்கப்படுவேன் என்பதைக் கண்டியுற்றேன். இதன் காரணமாக நான் நாட்டைவிட்டு வெளியேறத் தீர்மானித்தேன் எனக்குக் கொலைத் தண்டனை அளிக்கப்பட்டால் அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்படும் ரத்தக்களரியை நான் தவிர்க்க விரும்பினேன் போலந்திலுள்ள கமியூனிஸடுகள் ரத்தக்களரியையே விரும்புகிறார்கள். அதன் மூலம் ஆதிக்கத்தைக் கைப்பற்றிவிட அவர்கள் எண்ணி வருகின்றனர்.' [ராய்ட்டர்]

இந்திய குடியேற்ற நாடுகளின் மகாநாடு

சென்னை, நவ 2—

இந்தியா குடியேற்ற நாடுகளின 2-வது மகாநாடு நவம்பர் 21-ந் தேதி சென்னை மெமோரியல் ஹாலில் நடைபெறும் மலேயாவில் இந்திய சர்க்காரின் மாஜி பிரதிநிதியாகிய திவான் பகதூர் ஆர். சுப்பையா நாயுடு தலைமை வகிப்பார். டாக்டர் வி கே. ஜான், எம். எல். ஸி வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருப்பார். ஸ்ரீ எஸ். டையாஸ்யார் தூதுக்கோஷ்டியின் தலைவராக இருப்பார்.

பிஜீத் தீவைச் சேர்ந்த ஸ்ரீ பெர்னங் சுமதராவைச் சேர்ந்த ஸ்ரீ டி. குமாரஸ்வாமி டிரினிடாட், ஸ்ரீ சந்தர் பஹதூர் மதுரா இந்தியாவில் உள்ள வியடநாம் பிரதிநிதி ஸ்ரீ மைசாவ் மலேயா, சென்ற காவகரஸ் வைதியக் கோஷ்டியைச் சேர்ந்த டாகடர் ஸி. ஸ்ரீநிவாஸ சாஸ்தரி மலேயா சென்ற வைதிய தூதுகோஷ்டியின் அங்கத்தினர் லெட்டினென்ட் கர்னல் சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த ப்ரொபஸர் இன்னான் ராஜா முதலியவர்கள் பிரதிநிதிகளாக இந்த மகாநாட்டில் கலந்து கொள்வார்களென்று தெரிகிறது.

இதன் முதல் மகாநாடு 1935 அக்டோபரில் சென்னையில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியாவுக்கு அதிக ஆளி விதை

அமெரிக்காவுக்கு அதிக ஆமணக்கு விதை

புதுடில்லி, நவ 3—

மே 15-ம் தேதியும் செப்டம்பர் 12-ம் தேதியும் அறிவித்த அளவுகளுக்கு அதிகமாக ஆஸ்திரேலியாவுக்கு 3000 டன் ஆளி விதையும் அமெரிக்காவுக்கு 5000 டன் ஆமணக்கு விதையும் ஏற்றக இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதென்று சர்க்கார் அறிக்கை யொன்று கூறுகிறது.

அவ்விரு நாடுகளின் வர்த்தக ஸ்தல ஆர்டர் உடைய எந்த நபரும் கூசென்ஸ்களுக்கு மனு போட அருகதை உடையவரே.

பதினான்கு தேர்தல் ஆள் மாறாட்ட வழக்குகள்

கொழும்பு, நவ. 4

கொழும்பு மத்திய தொகுதி தேர்தலின் போது ஆள் மாறாட்டமாகவாக்களித்ததாக குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட 14 வழக்குகள் கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பண்டித குணவர்த்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதில் இரு வழக்குகளை நீதிபதி டிஸ்டிரிக்ட்கோர்ட் விசாரணைக்கு ஒத்திவைக்கார். 10 வழக்குகளை விசாரணை செய்வதையும் வேறு நாட்களுக்கு ஒத்திவைத்தார். வழக்கு விசாரணைக்கு கோர்டடுக்கு வராத ஒரு எதிரிக்கு வாரண்டு பிறப்பிக்க உத்தரவிட்டார். மற்ற வழக்கு இன்னும் ஒரு வாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கைமோசக் கொலைக்கு 8 வருடச் சிறை

களுத்துறை, நவ. 4

மகாசம என்னுமிடத்தில் அல்பிசிங்கோ என்பவரைக் கொலை செய்ததாக ஆர். ஏ. ஹெட்சிங்கோ என்பவர் மீது குற்றம் சாட்டித தொடரப்பட்ட வழக்கு களுத்துறை அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது விசாரணையின்போது எதிரி தாம் கைமோசக கொலை புரிந்ததாக ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு எட்டு வருடச் சிறைத் தண்டனை விதித்தார்.

சிவனொளிபாதத்தின் தர்மகர்த்தா உரிமை

டிஸடிரிக்கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

கொழும்பு, நவ 4

ரத்தினபுரி டிஸடிரிக்கில் உள்ள சிவனொளிபாதத்தின் தர்மகர்த்தாவாக தம்மை நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை இலங்கை பொது தர்மகர்த்தா சபை அங்கீகரித்து தமக்கு நியமனக் கடிதம் தரமறுத்து விட்டதெனறும் கூறி பொது தர்மகர்த்தா சபை மீது ஒரு வழக்கை கொழும்பு டிஸடிரிக்கோர்ட்டில் திரு. டி. ஸி. விஜயவர்தனா தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கிற்கு எதிரியை டிஸம்பர் 1-ம் தேதி பதில் சமர்ப்பிக்கும்படி நீதிபதி திரு. என். சின்னதம்பி தீர்ப்பளித்து விசாரணையை ஒத்தவைத்தார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 5உ இந்த பத்திரிகை 184A. கட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தாரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org